வெண்மதி

ஆசிரியை:
டாக்டர். டி. எஸ். ராஜலக்ஷ்மி அம்மை

1075

VOL. 12 FEBRUARY 1955 No. 2

1075
1-55

0335

விஜய 1
அணு 6 1



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 FEB 1955
MADRAS

மலரன்ன மங்கையருக்கு . . .

சோபையும், கவர்ச்சியும் தருவது அவரின் ஆசையே அழகுக்கும் அழகு செய்ய வல்ல ஏ. ஸி. எச். ஆடைகள் ஒவ்வொரு சந்தர்பத் தேவைக்கும் பொருந்த பாகுமாறு எண்ணிறந்த விசித்திரக் கரை, தலைப்பு உடல் நவீன விநோத மாதிரிகளில் கிடைக்கின்றன.

எங்கள் கைத்தறி ஜவுளிகள் சென்னையிலும் இதர முக்கிய நகரங்களிலும் உள்ள எம் விற்பனை எம்போரியங்களில் கிடைக்கும்.

ஹாலேவெஸ் கார்டன்ஸ்' 4. பாந்தியன்ரோட், எழும்பூர் மதருஸ்

THE

INTERNATIONAL MUSIC FELLOWSHIP

(Registered)
SCHOOL SECTION

COACHES STUDENTS FOR GOVERNMENT TECHNICAL LOWER AND HIGHER EXAMINATIONS IN MUSIC AND ALSO COACHES FOR THE SUPPLEMENTARY DIPLOMA COURSE IN INDIAN MUSIC

FOR PARTICULARS

Apply with 8 As. Stamp for Prospectus

The PRINCIPAL

153, NETAHAJI SUBASH CHANDRA BOSE ROAD

MADRAS. 1.

RAJESWARY BAKERY
AND
CONFECTIONERY

GOVERNMENT & LOCAL BOARD SUPPLIERS

No. 100 Seven Wells Street Madras -1.

Manufacturers and Suppliers of High Class Bread

Biscuits and Peppermints

ராஜேஸ்வரி பேக்கரி

நெ. 100, ஏழுகிணறு தெரு, சென்னை 1.

எங்களிடம் தயாராகும் உயர்தர கல்யாண கேக்.

குளுகோஸ் பார்லி, ரஸ்க், பட்டர் முதலிய

அநேகவித பிஸ்கோத்து வகைகளும்

மற்றும் பலவித மிட்டாய்களும்

டாப்பி தினுசுகளும்

தயாரித்து கொடுக்கப்படும்

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 **Sundari Elixir**

For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **Phosphorus Oil**

A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **Mastana Pills**

Unique in the field, combining, both Allopathic & Ayurvedic systems curing general debility Rheumatic pains, Hay fever & What not.

4 **Drakhyasava With Gold Makradwaja**

A great Blood Purifier & digestive &Potential Tonic.

Stocked by all important chemists & druggists of South India

K S. MEHTA & Co

50, CHINA BAZAAR, MADRAS-1

தே வை

"வெண்மதி" *தமிழ் மாதப் பத்திரிகைச்* சந்தா சேர்த்துக் கொடுக்கும் ஏஜண்டுகளும், நகரங்களில் விற்பனை செய்யும் ஏஜண்டுகளும் தேவை.

விவரங்கட்கு :

வெண்மதி பிரசுராலயம்

153. நேத்தாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோட்

சென்னை—1.

வெண்மதி அச்சகம்

(Venmathi Press)

நம் வெண்மதி பத்திரிகைக்காக அச்சகம் திறந்துள்ளோம். இந்த அச்சகத்தில் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மொழிகளிலே புத்தகங்களும், பில் பாரங்களும், டிக்கட் வகைகளும், பல கலர்களில் புத்தக ராபர்களும் மிக அழகாகப் பிழையின்றிச் செய்து கொடுக்கப்படும்.

அன்பர்கள் ஆதரவுடன் அச்சக ஆர்டர்கள் கொடுப்பீர்களென்று எதிர்பார்க்கிறோம்

வெண்மதி அச்சகத்தார்.

153, *நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு*

சென்னை-1.

ஸத்யா கூந்தல் தைலம்

பெண்களுக்கு

ஒரு சந்தோஷச் செய்தி

நரைத்த மயிர் கருத்துவிடும் கூந்தல் உதிர்தல், சுண்டு பேன், கண் எரிச்சல், தலை சுற்றல், மற்ற எல்லாவித தலை நோய்களும் இந்தத் தைலத்தைத் தடவினுல் பறந்துவிடும். திரௌபதி கூந்தல் போல் விரைவில் வளரும்.

8 அவுன்ஸ் 2-4-0

V. P. செலவு வேறு

சத்யா & கோ.,

நெ. 153, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட்

மதருஸ்–1.

Venmathi Coaching Institute
of
Printing for Women & Girl Students

153, Nethaji Subhas Chandra Bose Road, Madras-1

Those who want to learn the Art of Printing i,e Colour Printing, Composing, Setting Proof-Reading etc. in various Languages, may consult the above institute.

வெண்மதி அச்சு பாடசாலை

153 நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதருஸ்-1

அச்சு வேலையை கற்றுக்கொள்ள விரும்பும் ஸ்ரீகளும், பெண்களும் மேற்கண்ட விலாசத்திற்குத் தெரிவித்துக் கொள்ளவும்

மூல வியாதிகளுக்கு

கருணைக் கிழங்கு லேகியம் சாப்பிடுங்கள்

மூல வியாதிகளுக்கு ஆச்சரியமான மருந்து

உலகமெங்கும் புகழ்பெற்று வருகிறது.
பத்தியமில்லாத மருந்து சாப்பிட மிகவும நன்ருக இருக்கிறது

ஆபரேஷன் செய்து குணப்படாதவர்களுக்கும் இம்மருந்தை
சாப்பிட்டு ஆயிரக்கணக்கான நோயாளிகள்
குணமாகி விட்டார்கள்.

மூலச்சூடு, மூலத்தில் குத்து, எரிச்சல், அரிப்பு,
கடிப்பு, சீழ், இரத்தம் வருவதை 3 வேளையில் குணப்படுத்துகிறது

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு
உடனே ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும்

அண்ரமணை வைத்தியர்

S. T. மாணிக்க பிள்ளை R. I. M. P.
பழனி ஆண்டவர் வைத்தியசாலை.
114 தூளை ஹை ரோட் சென்னை

பழநி ஆண்டவர் வைத்தியசாலை

பழநி.

வெண்மதி

பொருளடக்கம்

மலர் 12 இதழ் 2
15—2—1955

கலைபங்கம் 13
விஞ்ஞான உலகம் 17-19, 39
இசை இன்பம் 20
மனத்திரை 21
நட்சத்திர மண்டலம் 25
சிறுவர் பகுதி 26
சிரித்துப் பார் 28
எங்கள் தோட்டம் 29
அருட்கோயில் 31
நீங்கள் கேட்டீர்களா? 34
பத்மஜா 35
டாக்டர் சாமிநாதய்யர் 40
அரசியல் அர[redacted]ங்கம் 41
சினிமா உலகம் 44
நாடும் நடப்பும் 45
நூலின் நுட்பம் 48
சமையல் பகுதி 49
ரயில்வே கால அட்டவணை 51
தாயும் குழந்தையும் 53
அம்மாள் இஷ்டப்படி களம். 2. 7-16

—

'வெண்மதி'யில் வெளியாகும், கதைகள், கட்டுரைகளில் உள்ள பெயர்கள், சம்பவங்கள், யாவும், கற்பனையே.



(ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டுக்கு, யுனைடெட் ஸ்டேட்ஸ் பெண்கள் அளித்த பரிசு படம். ஸ்ரீமதி பண்டிட் படத்துடன், அதைத் தயாரித்த மார்கரெட் மெக்டொனல் பிலிப்ஸ் அம்மையையும் இதில் காணலாம்)

தமிழ்நா
1987

வெண்மதி

மாதர்களின் சிறந்த மாதப் பத்திரிகை

ஆசிரியை: டாக்டர் D. S. ராஜலக்ஷ்மி

மலர் 12	1955 பிப்ரவரி மீ	இதழ். 2,

காங்கிரஸ் சபை சென்னையில் கூடிக் கலைந்தாகி விட்டது. லக்ஷக்கணக்காக ஜனங்கள் வந்து குழுமினர். லக்ஷக்கணக்காகப் பணம் சிலவழிக்கப்பட்டது. இவ் வருஷத்திய காங்கிரஸ் சபையிலோ மிக்க சிக்கலான அரசியல் வாதங்களோ, பொருளாதாரப் பிரச்னைகளோ, இவ்வளவு பெருங் கூட்டத்தைத் திரட்டக் கூடிய மாதிரியானதாக எதுவுமிருந்ததாகப் புலப்படவில்லை. இருந்தும் இக் கூட்டமேன்? வேடிக்கைபார்க்கவா இவ்வளவு பணம் சிலவழித்துச் சரீர சிரமங்கள் பொருட்படுத்தாது வெகு வெகு தூரதேசங்களினின்றும் கர்ப்பிணிகளும், கைக்குழந்தைக்காரிகளும் தத்தம் புருஷர்களோடும் குடுப்பஸ்தர்களோடும் சென்னை வந்து கூடினர்? இல்லை இவ்வளவு பெயர்களும் அந்த நேரு என்ற மகானை நேரில் கண்டு தரிசித்தும், அவர் வாய்மொழிகளைப் பிரத்யக்ஷத்தில் கேட்டுப் பருகியும் திருப்தியடையவே சென்னை வந்து குழுமினர் என்று கூறத்தான் வேண்டியிருக்கிறது.

இம்மாபெருங் கூட்டங்கண்ட நேருஜியும் பிரமித்தே போய் அவ்வளவுபேர்களது மனமும் குளிரக் காக்ஷியளித்து ஹிதோபதேசங்களே செய்து போந்தார். இத்தனை வருஷங்களாகக் காணப்படாத ஓர் பெரும் நோக்கம் இவ் வருஷத்திய அறுபதாவது காங்கிரஸ் சபைப் பேச்சிலே தான் தோன்றியது. அதென்ன? ஓர் தேசத்திய அரசியலோ, பொருளாதார நிலையோ, சமூக வாழ்க்கை முறைகளோ, அத்தேசத்தின் ஆக்ஷியாளரது மனப்பான்மையைப் பொருத்ததுவேயென்ற ஒப்பற்ற உணர்ச்சியுண்மை, சஷ்டியாப்த காங்கிரஸ் கூட்டத்தில்தான் வெளிப்படுத்தப்பட்டது. 'அரசு எவ்வழி, குடிகள் அவ்வழி' என்ற மூதுரையின் மர்மம், இன்றே நமது ராஜாங்கம் சிந்தித்திட

மனங்கொண்டது. நடை முறையில், சபையார் தீர்மானம் எவ்வளவு நேர்மையுடன் நடந்தேறுகிறதோ, இல்லையோ, கிடக்கட்டும். மனப்பண்பாடு மக்களிடமும் ராஜ்யாதிகாரிகளிடமும் இருந்தக்காலே நாடு செழித்து சமூகம் சீர்படுமென்ற உண்மை உணர்ச்சி உண்டானதுவேபோதும். கோடிக் கணக்கான சிலவும், லக்ஷக்கணக்கான ஜனங்கள் பட்ட கஷ்டமும், இந்த உண்ர்ச்சி அறிவுக்கு முன், சிறிதும் பாராட்டத்தகாததுவே, நேருஜியைத் தரிசிக்க வந்த ஜனங்கள், நேருஜி வாயால் மனப்பண்பாடு பெறுங்கள் என்று சொல்லக் கேட்டதின் பயன் மகத்தானதே!

காங்கிரஸ் சபையில் நடந்தேறிய தீர்மானங்களின்சாரமென்ன? காங்கிரஸ் கக்ஷியைப் பலப்படுத்திச் சுத்தப்படுத்தி, சமூக நேர்மைக்கும் சீர்மைக்கும் பழுதுண்டாக்க வல்லனவற்றையறிந்து அகற்றுவதற்குமான வழி துணைகளைத்தேடி, 'ஸோஷியலிஸ்டிக்பாடர்ன்' என்ற சமூக அமைப்பை உண்டாக்க வேண்டியதென்பதுவே இவ் வருஷத்திய காங்கிரஸ் சபையில் நடந்தேறிய தீர்மானங்களின் சாரம். 'நாமே நமது பெரும் விரோதிகள்' என்ற தத்வார்த்த ரகசிய உண்மையை, அதன் சாரமறிந்தோ, அறியாமலோ, ஒரு மகான், தமது பேச்சில் வெளியிட்டார். பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான க்ஷேம லாபங்களைத் தேடிடுவதும் ஓர் முக்யப் பிரச்னையாக அமைந்தது. நாட்டின் பல்வேறு வியவகாரத் துறைகளிலும் பெண்கள், தமது உரிமை ஸ்தானங்களைப் பெறச் செய்ய வேண்டியது அத்யாவசியமென்றுர்கள். தேச நன்மை, பெண்கள், பூர்ணவளர்ச்சிக்கும் தொண்டிற்குமான வசதிகளைச் செய்து கொடுபபதிலும், சமூக வகைகளாலோ, சட்டதிட்ட கட்டுப்பாடுகளாலோ கஷ்டநிஷ்டூரங்களுக் காகாதபடிக்கு, பெண்களுக்குச் சொத்துரிமை பாத்யதைகள் கொடுப்பதிலுந்தான் திடப்படக் கூடும் என்பதுவும் காங்கிரசார் நோக்கமாக வெளிவந்துள்ளது. குழந்தைகள் க்ஷேமலாப கவனமே தேசிய வாழ்க்கைச் சிறப்பளவை விளக்குவதாகுமென்பதுவும் அறிவுறுத்தப் பட்டது. ஆகாயக் கோட்டைகள் கட்டிப் போவதைவிட்டு விடுவதே காங்கிரசின் நோக்கமென அறிவிக்கப்பட்டுள்ளது மெச்சத்தக்கதே. தினசரி வாழ்வுக்கானதுகளைச் செய்வதே இனிக் காங்கிரஸ் உணர்த்திய அறிவு இதுகள்' புதிதல்லவே என்னலாம் பலர். அடிக்கடி பாடும் பாட்டுதான் என்று அலக்ஷியத்துடன் 'சூ' கொட்டி விடலாம் சிலர். ஆனால், இதை நன்கு ஆராய்ந்து பார்த்தால், உன்னத ஸ்தானம் வகிக்கும் ஒன்றிரண்டு தேசத் தலைவர்களுக்காவது, இதுகாறும் தோன்றுததோர் புத்தறிவ, இவ் வருஷந்தான் தோன்றியுள்ளதென்றே சொல்லவேண்டும். சுதந்திரம் பெற்று ஏழு வருஷங்களாகியும் நாட்டில் சாந்தியோ, அமோகமோ, நேர் நடவடிக்

கையோ சிறிது மில்லாது நாம் தவித்து வருவதே நமது உண்மைத் தலைவர்களது புண்பட்ட உள்ளத்தை உறுத்தி வாட்டுகிறதுபோலும். ஆகவேதான், அரசியல் பிரச்னைகளை அதிகமாகச் சர்ச்சையிடாது, மனப்பண்பை அடிப்படையாகக் கொண்ட தேச நலப் பொருளாதார, க்ஷேமலாபச் சிக்கல்களில் கவனஞ் செலுத்துவாராகினர் இவர்கள். ராஜாஜி ராமாயணம் ஆராய்ச்சி செய்கிறார்- பக்தியே முக்கியமெனப் பிரசாரஞ் செய்து வருகிறார். தெய்வ ஞாபகமும், தெய்வ பக்தியும் உலகத்தாருக்கு உண்டாக்க உழைக்கிறார். அணு குண்டுகளை அலை கடலில் அள்ளிப்போட வல்லரசுகளுக்கு அரிய எளிய புத்திமதி கூறுகிறார். சாந்தி நிலவக் கூடிய வழிகளேதாம் இவை. நேருஜி, நமது இந்தியாவே உலக சமாதான வழி காட்டியென்ற விருதை வாங்கித்தர முன் வந்துள்ளார். இவர்களிருவரும் இத் துறைகளில் உழைத்து என்ன பயன்? இவர்கள் கீழ் உழைப்பவர்களோ பதவி தேடிச் சகாக்களாக வந்து திகழ முயல்பவர்களோ, இதே நிர்மல மனப் பான்மைகொண்டுள்ளார்களா? 'கூலிக்கு மாரடிக்கும்' உத்யோகஸ்தர்களை வைத்துக் கொண்டா தேசத்தில் சாந்தியும், நேர்மையும், சீர்மையும் ஓங்கக் கூடும்? சமயம் வாய்த்தபோது, மாமன் மச்சான்களுக்கானதுகளைச் செய்து வைத்து, சமயா சமயங்களில் கிடைத்ததை வாரிச் சுருட்டிக் கொண்டு போக வேண்டுமென்ற நோக்கத்துடன் பதவியும் அதிகாரமும் நாடித் தேடிவருபவர்களிடமிருந்தா, சத்யமும் குடிகள் நலமும், தர்மமும் எதிர் பார்க்கப்படும்?

காங்கிரஸ் தலைவர், தமது பேச்சுரையில், சமூகவாழ்க்கையில், ஜாதி பேதம் ஒழித்திட வேண்டுமென்று சொன்னார். தலைவர்பேச்சு, இவ்விடம் வருகையில்தான் தடுமாறியதுபோலத் தென்பட்டது. ஜாதிபேத ஒழிப்பு என்றால், என்ன? எப்படி? எவ்விடம்ஏற்பட வேண்டியதென்பதுதான் நன்கு விளங்கவில்லை. இதர மதஸ்தரிடை ஜாதி பேத பாகுபாடுகள் கிடையாதா? ஒழிந்ததா? ஒழித்திடத் தான் யாராவது முன் வந்ததுண்டா? ஹிந்துமத ஜாதிபேதம் மட்டும், ஹிந்துக்களை வருத்தித் துளைப்பானேன்? ஜாதிபேதமொழித்திடப் பேசிவரும் அரசாங்கத்தார், முதல் முதலில், தாங்களே தங்கள் காரியங்களில் அதை ஒழித்திட முன் வருகிறார்களா? பதவி, உத்யோகம், அதிகாரம், என்பவை, தகுந்த யோக்யதையும், சிறந்த குணமும், பரந்த மனப் பண்பாடுங் கொண்ட தேர்ச்சியாளர்களிடமே ஒப்புவிக்கப்பட வேண்டிய பரம சிலாக்கியமான தெய்வீக சொத்துக்களல்லவா? இவற்றை, 'கம்யூனல் ரொடேஷன்' என்ற ஜாதி விகிதாசார முறையில் பங்கிடு செய்து

வளர்ப்பது, யாருக்கு லாபம்? யாருக்கு க்ஷேமம்? பழியைப் பொது ஜனங்கள் தலையில்போடுவது, அரசாங்கத்தார்களுக்கு வெகுசுலபந் தான். உயர்ந்த ராஜ்யாதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்களே யென்ற கூக்குரலெழும்பினால், உடனே அரசாங்க வர்க்கத்தினர், 'நீ ஏன் லஞ்சங் கொடுத்து காரியம் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறாய்' என்று நம்மைக் குற்றவாளிகளாக்கித் தண்டனைக் கும் ஆளாக்கி விடுகிறார்கள். அதிகாரி, சத்யசந்தனாயிருந்தால், லஞ்சங் கொடுத்தாலும் வாங்குவானா? ஜாதி வீதாசார பங்கிடுகார ணமான பதவிவிநியோக காரணத்தால்தானே குணமும், யோக்ய தையுமற்றவர்களும், மேலேறிட வழியேற்படுகிறது? ஜாதி பேத ஒழிப்பு, சமூகத்தில் ஏற்படவேண்டியதுதான். ஆனால் அவரவாது மதாசாரமும், குலாசாரமும், அவரவர் குடும்பானுஷ்டானங்களா க ஆதரிக்கப்பட வேண்டியதுவே மதத்தின் திடத்திற்கும், தேச சமூக மேன்மைக்கும் சீர்மைக்கும் அத்யாவச்யமான அடிப் படை. இந்த அறிவு, நமது தேசத் தலைவர்களுக்கு ஏற்பட்டக் காலே நாம் சுயராஜ்யம் பெற்றவராவோம்.

நமக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த காங்கிரஸ் கக்ஷியும் உண்மை வெற்றி பெற்றதாகும். நேருவுக்கும், ராஜாஜிக்கும் அவரது முதிர்ந்த வயது காலத்தில்தான் இவ்வுண்மை அறி வைப் பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய அவச்யம் தெரிந்ததுபோலும். தமது பூர்வீக கொள்கை கோட்பாடுகளை நினைத்தால், இவ்வுண்மையை எப்படி வெளிப்படுத்தி பயன் படச் செய்வதென்ற மனச்சுருக்கு, இப்போழுதும் அவர்களுக் கிருப்பது நியாயமே. வயதின் காரணமாகவும், அனுபவகாரண மாகவும், அவர்கள், தமது வயோதிகத்திலறிந்து உணர்ந்த இந் தச் சத்ய நெறியை, தங்கள் முகம் நோக்கியே நிற்கும் ஹிந்துக் களுக்கும், இந்தியர்களுக்கும் இனியேனும் தெளிவுறுத்துவா ராக. குடும்ப தர்மத்திற்கும், சமூகப் பொது தர்மத்திற்கும், தேச அரசாங்க தர்மங்களுக்குள்ள நுட்பமான வித்யாசங் களையறிந்து அனுஷ்டித்திட முன்வருங்காலே காங்கிரஸ் கக்ஷி வெற்றி பெற்றதாகும். நமது நாடும் உண்மைச் சுய ராஜ்யம் பெற்றதாகும். இதுவே இவ் வருஷத்திய காங்கிரஸ் சபை விளக் கிய அறிவு என்னல் வேண்டும். சத்தியமே ஜயம்!

விஞ்ஞான உலகம்

ரேடியம் தந்த மேரி கூரி

(P. Vijayaraghavan, M: A.)

பெண் குலத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்த பெருந்தகையார்; விஞ்ஞானத்தொண்டிற்கே வாழ்க்கையை அர்ப்பணித்தவர் மேரி கூறி அம்மை.

1867-ல் போலண்டு தேசத்தின் தலை நகராகிய வார்ஸாவில் பிறந்தார். தந்தை ஓர் விஞ்ஞான ஆசிரியர். தாய் ஒரு பெண் பாடசாலையில் தலைமை ஆசிரியர். ஒன்பது வயது வரையில் வீட்டிலேயே கல்வி கற்றார். பின்னர் தாய் காலமாய் விட்டதினால், ருஷ்ய பாடசாலைக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கே ஆறு வருஷ காலம், கணிதமும், விஞ்ஞானமுமே, இவர் கவனத்தைக் கவரக் கல்வி பயின்றார். விஞ்ஞானத்திற்கு வேண்டிய ஆராய்ச்சிசாலை இல்லையே என்று மிகவும் வருந்தினார்.

ஏழ்மையின் காரணமாக பதினைந்தாவது வயதில், பாடசாலை படிப்பை நிறுத்திக்கொண்டு, பிழைப்பு தேடவேண்டியதாயிற்று. அடிமைகளாகக் கொடுமைப் படுத்தப்பட்ட, போலீஷ் மாணவர்கள், தேச பக்தசமாஜம் ஒன்று ஏற்படுத்த, அதில் அங்கத்தினராகச் சேர்ந்தார். ருஷ்ய அதிகாரிகள் அச் சமாஜத்தின் அங்கத்தினரைக் கைது செய்ய ஆரம்பித்த காரணத்தினால், மேரி வார்ஸாவில் தங்க முடியாத நிலைமை ஏற்பட, க்ராக்கோ சர்வகலாசாலை தேடிச் சென்றார். அங்கே, பெண்கள் விஞ்ஞானம் பயிலும் வசதிகளில்லாததால், பாரிஸுக்குப் போய், அங்கே கஷ்டங்கள் அனேகமிருந்தபோதிலும், மனம் தளராமல், ஸார்போர்ன் ஆராய்ச்சிசாலையில் விஞ்ஞானம் கற்று வந்தார்.

அந் நகரின் விஞ்ஞானப் பாடசாலையில் ஆசிரியராகயிருந்த பியர் கூரி என்பவரு

டைய நட்பு ஏற்பட்டது. விஞ்ஞானத்தின்மூலம் ஏற்பட்ட நட்பு, நாளடைவில் காதலாக மாறி, 1895–ம் வருஷத்தில் கலியாணத்தில் கொண்டு நிறுத்தியது. இச்சேர்க்கையை விஞ்ஞானம் செய்த பாக்கியம் என்றே சொல்லவேண்டும். இவர் கணவருக்குச் சொற்ப சம்பளம்தான். வீட்டு வேலைகளைத் தாங்களே செய்து கொண்டு, ஆராய்ச்சி சாலைக்குப் போவார்கள். கணவன் செய்யும் ஆராய்ச்சிக்கு உதவியாக இருந்ததோடன்றி, ஆசிரியர் பதவிக்குரிய பரீட்சைக்குப் படித்து, கல்யாணமான வருஷத்திலேயே அப் பரீட்சையில் முதலில்தேறினர். எனவே அவருடைய உழைப்பு.

1897 வருஷத்தில் பெக்கரல் என்ற பிரஞ்சு விஞ்ஞானி, யுரேனியம் (அணுகுண்டுசெய்ய உபயோகப்படும் வஸ்து) என்னும் தனிப்பொருள், கிரணங்கள் வெளியிடுவதைக் கண்டார். யுரேனியத்தைப் போல வேறு ஏதாவது வஸ்துக்களும், கிரணங்கள் வெளிப்படுத்துகின்றனவா என்ற ஆராய்ச்சியில், கூறி அம்மையார் ஈடுபட்டு, தோரியம் என்னும் வஸ்து அவ்வித சக்தியுடையதாக இருப்பதைக் கண்டார். அது யுரேனியத்தைவிட அதிக சக்தி வாய்ந்ததாக யிருந்தது.

பின்னர், யுரேனியம் காணப்படும் தார் எண்ணெய்கட்டியிலுள்ளசகலரஸாயனப் பொருள்களை, தனித்தனியாகப் பிரித்து, ஆராய்ந்ததின்மூலம் 1898-ல் ஒரு புது வஸ்துவைப் பிரித்தெடுத்தார்கள். தாய் நாட்டின் பற்றின் காரணமாக அவ்வஸ்துவிற்கு, "போலோனியம்" என்று பெயரிந்தார் அம்மையார்.

அதே வருஷம், போலோனியம் காணப்பட்ட தார் எண்ணெய் கட்டியில், அதையும் விட அதிக சக்தி வாய்ந்த வேறுவஸ்து இருப்பதாகக் கண்டார். அந்த வஸ்துவைப் பிரித்தெடுப்பதற்குவேண்டி, மனம் தளராத தம்பதிகள், ஆஸ்திரியா தேசத்தில் கண்ணாடி செய்வதற்காக, தார் எண்ணெய் கட்டியிலிருந்த யுரேனிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டு, எஞ்சியதை வீணே போட்டு வந்ததால், அக்கழிவுக்கு விலை அதிகமில்லாததினால், அதில் ஒரு டன், ஆஸ்திரிய அரசாங்கத்தினிடமிருந்து பெற்றும், ஆராய்ச்சியில் ருந்த ஆர்வத்தால் அபாயங்கள் பலவற்றையும் லக்ஷியஞ் செய்யாது, உடல் நலனைக்கூட பொருட்படுத்தாமல், நான்கு வருடம் அரும் பாடுபட்டு, அந்த ஒருடன் தாரிலிருந்து, ஆறு அரிசி எடை வஸ்துவைப் பிரித்தெடுத்தார் மேரி கூரி அம்மையார். அந்த வஸ்துதான் "ரேடியம்" எனப்படுவது.

ரேடியம், விஞ்ஞான உலகில் ஒருஅபூர்வ விசித்திரப்பொருள். மிகவும் விலையுயர்ந்த வஸ்து. கதிர் இயக்கத்தின் காரணமாகத்தானுகவே உஷ்ணத்தை உண்டாக்கிக்கொண்டும், சுயம் பிரகாசமாகவும் இருக்கும்

ரேடியம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் அறிய முடியாமலிருந்த அனேக விஷயங்கள், ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டதின் மூலம் தெளிவாக அறியப்பட முடிந்தன. அணுக்களின் அமைப்பையும், லக்ஷணத்தையும் விளக்கியதோடு, பூமியின் வயதை நிர்ணயிக்கவும் ரேடியம் உதவியது. ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக்கும் ரஸவாத வேலைக்கும் உதவியது. வைத்ய உலகத்தில் மிகவும் சங்கடத்தைக் கொடுத்துவந்த புற்றுநோய்க்கு ரேடியத்தின் மூலம் சிகிச்சை காணமுடிந்தது. ரேடியத்தின் மகாத்மியம் எழுத்திலடங்காததுவே! அதை உலகுக்களித்ததற்காக உலகம் கூரி தேவிக்கு என்றும் நன்றி பாராட்ட வேண்டியதே.

விஞ்ஞானிகள், தாங்கள் கண்ட உண்மையை, ஒளிக்காமல் பலர்க்கும் பயன்பட வெளியிட வேண்டும். சொந்த லாபத்திற்கே உபயோகப்படுத்திடலாகாது, என்று எண்ணிய கூரி அம்மையார், அமெரிக்க நிபுணர்களுக்குத் தானறிந்த ரேடியம் எடுக்கும் முறை முழுவதையும், இலவசத்தில் தெரிவித்து விட்டார். இதுவன்றோ தன்னடக்கத்தையும், தன்னலம் கருதா தியாகத்தையும் காட்டுகின்றது.

1903-ல் கூரி தம்பதியார், ஆங்கில நாட்டு விஞ்ஞானத் தலைமைச் சங்கத்தின் அழைப்பிற்கிணங்கி, அங்குச் சென்று, அரச உபசாரம்பெற்று, லண்டன் ராயல் ஸொஸைடியார் அளித்த டேவிப் பதக்கத்தைப் பெற்று வந்தார்கள். அதே வருஷம் டிஸம்பர் மாதத்தில், உலகத்தில் ஒப்பற்ற பரிசாகிய பௌதிக விஞ்ஞான நோபல் பரிசு, கூரி தம்பதியர்களுக்குப் பாதியும், பெக்கரல் ஆசிரியருக்குப் பாதியாகவும் வழங்கப்பட்டது. புகழும் பெருமையும் இப்படிக் கூடியதும், எல்லா தேசங்களிலிருந்தும், அனேக ஜனங்கள் அவர்களைத் தரிசிக்கவந்தார்கள் அதனால் தம்பதிகளுடைய ஆராய்ச்சி, தடைபட்டது. புகழானது தங்கள் வாழ்வைக் கெடுத்து வருகின்றது என்று வருந்தினர்.

1905 ஜுலையில், பிரஞ்சு விஞ்ஞான சங்கம், பியரை அங்கத்தினராகவும், சார்போர்ன் சர்வகலாசாலை, அவரை ஆசிரியராகவும் நியமிக்கும்பாக்கியத்தைப் பெற்றன. அன்றே "வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்து விட்டது." 1906 எப்ரல் 19 அன்று, பியர், விஞ்ஞான சங்க ஆசிரியர்களுடன் ஓர் விருந்தருந்தி வீடு திரும்பும்பொழுது, மழை பெய்ய, வழுக்கி விழுந்து, ஓர் வண்டி அவர்மேல் ஏறி, அவரை விண்ணுலகத்திற்கு அனுப்பி விட்டது. என்னே விதியின் கோர விளையாட்டு!

அவருடைய குழந்தைகளுக்கு தேசிய பென்ஷன் அளிக்க அரசாங்கம் முன்வந்தது. ஆனால், கூரி அம்மை, அதை ஏற்றிட மறுத்து விட்டார்.

(39ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ பட்டாபிராமய்யரின் ஜாவளி

மோஹனராகம்—ரூபகதாளம்

பல்லவி

மோஹமெல்ல தெலிஸெனுகதரா
மோஹனங்க வினா (மோ)

அனுபல்லவி

தாஹ வந்துனி ஸாடி நா
கேஹ முன கேதெம்சின நீ (மோ)

சரணங்கள்

1. மதிலோ வஞ்சக முனுனெஞ்சி
வதனமுன மாதுர்யமுஞ்சி
ஸூதிபை நீ நெனரு னுஞ்சி
ஸதயுனி தீரு நடிஞ்சே நீ (மோ)

2. பருபுபை நா கரமுபட்டி
மருவனனி நாசிரமு கொட்டி
ஸரஸமாடி பூலுஜூட்டி
தருணினெஞ்சி தத்தரிஞ்சே நீ (மோ)

3. தாலவனலோ லா நன்னு
வாலனதோ நேலுவேள
சாலப்ரேமதோனு லேசி ஆ
பால நேலபோயின நீ (மோ)

❀❀❀

மனத்திரை

(A. ராஜலக்ஷ்மி)

ஊர்வலம் எங்கள் தெரு முனைக்கு வந்துவிட்டது. இரட்டை நாதஸ்வரக் கச்சேரி வெகு நேர்த்தியாக இருந்தது. நாதஸ்வர அரவங்கேட்டு அக்கம் பக்கத்திலுள்ள ஆண்களும் பெண்டிரும் குழந்தைகளுமாகத் தத்தம் வீடுகளிலிருந்து ஊர்வலக்காட்சியை வேடிக்கைப் பார்க்கலாயினர். கண்ணைக் கவரும் வர்ணங்களில் விதவிதமான பட்டாடைகளை உடுத்தி சந்தனக்கிண்ணியையும் தட்டுக்களையும் ஏந்தியவாறு முன்னும் பின்னுமாக ஆண்களும் பெண்டிரும் குழந்தைகளுமாகச் சென்று கொண்டிருந்தார்கள். டாக்ஸி, மோட்டார் வாகனத்திற்கு வெகு நேர்த்தியாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மணப்பெண்ணும் மணமகனும் அமர்ந்திருந்த காட்சி பார்ப்போரின் மனதைப் பரவசப்படுத்தியது. விதவிதமான வாண வேடிக்கைகளும் கூட்டமும் பார்ப்பதற்குப் பெரிய விழா போல் கோலாகலமாகக் காட்சியளித்தன. 'பாரதி வித்யாலயம்' என்ற பெண்கள் தங்கியிருந்த பச்சைக்கட்டிட ஹாஸ்டலின் மூன்றுவது மாடியறையின் கைப்பிடிச்சுவரில் சாய்ந்தவாறே ஊர்வலக் காட்சியை வேடிக்கைப் பார்க்கலானாள் கல்யாணி. பி.ஏ.எல்.டி. பலவிதமான வாணவேடிக்கைளுக்குப் பிறகு ஊர்வலம் நகர்ந்தது. கட்டிலில் வந்து படுத்தாள் கல்யாணி. கடியாரம் பதினோரு முறை அடித்து ஓய்ந்தது. இப்படியும் அப்படியும் புறண்டு படுத்த கல்யாணியை நித்திராதேவி ஆட்கொள்ளவில்லை. இன்று ஏனோ அவள் மனம் ஒரு நிலையில்லாமல் தத்தளிக்கிறது கடந்த பத்தாண்டுகளுக்குமுன் நிகழ்ந்த அச்சம்பவம் அன்று அவள் மனத்திரையிலே தோன்றியது.

திருச்சியிலிருந்த ரகுநாதன் தம்பதிகளுக்கு வெகு நாட்கள் குழந்தைப்பேறில்லாமல் தவமிருந்து பிறந்தவள் கல்யாணி ரகுநாதன் தம்பதிகள் குழந்தையை வெகு ஆசையுடன் வளர்த்தனர். பிரபல கம்பெனி ஒன்றின் தலைமை குமாஸ்தா பதவியைவகித்து வந்தார் ரகுநாதன். உத்தியோகமும் அந்தச்சிறு வீடுந்தான் அவருடைய ஆஸ்தி. அப்பொழுது எழாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தாள் கல்யாணி. அப்பொழுதுதான் அச்சம்பவம் நடைப்பெற்றது. பக்கத்துக்கிராமத்தில் வசித்து வர்த ரகுநாதனின் ஒரே தமக்கையான கோமதியும் அவளுடைய கணவனும் ஊரில் பரவியிருந்த ஒரு கொடிய நோய்க்கு ஆளாகி அகால மரணமடைந்த செய்தி கேட்டு அவர்கள் கிராமத்திற்குச் சென்று திரும்பி வரும் போது அவர்களின் ஒரே பிள்ளை அநாதையான ராமகிருஷ்ணனை அழைத்து வந்துவிட்டார் ரகுநாதன். கல்யாணியை விட நான்கு வயது மூத்தவன் ராமகிருஷ்ணன். அந்த வருடம் அவனை எஸ். எஸ்

எல். ஸி யில் சேர்த்திருந்தார்கள் 'அத்தான்' 'அத்தான்' என்று தன் அன்புக்கொடியை தன் அத்தானின் மேல் படர விட்டிருந்தாள் கல்யாணி. கல்யாணியும் ராம கிருஷ்ணனும் வெகு அன்யோன்ய மாகப் பழகலாயினர். நகமும் சதையும்போல வீணையும் நாதமும் போல இவ்வாறெல்லாம் சொல்லுகிறார்களே அதுபோல உள்ளங் கள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டன. கல்யாணி ராமகிருஷ் ணன் இவர்களுடைய நேசத்தை யாரும் பிரிக்க முடியாதபடி வெகு அன்யோன்யமாகப் பழகி வருவதைக் கண்டு ரகுநாதன் தம்பதிகள் உள்ளம் பூரித்தனர். அவ்வாண்டு ராமகிருஷ்ணன் எஸ். எஸ். எல். ஸி. தேறிவிட்டான். வேலைக்குப் போவதாகத் தன் மாமா ரகுநாதனிடம் கூறினன். ஆனல் ரகுநாதன் இப்பொழுது வேலைக்குப் போகவேண்டாமென்றும் நான் எப்படியோ கஷ்டப் பட்டுக் காலேஜில் படிக்க வைப்பதாகவும் வற்புறுத்திக் கூறவே வேறு வழியில்லாமல் அவ்வருடம் திருச்சியில் இன்டர் மீடியட்டில் சேர்ந்து படிக்கலானன்.

படிப்பில் அதிக சூடிகையான ராமகிருஷ்ணன் அவ்வருடம் சென்னை ராஜதானியிலேயே இண்டர்மீடியட்டில் சிறப்பாகத் தேறினன். ஆகையால் அரசாங்கத்தார் அவனுக்கு மேல் படிப் பிற்காக உபகாரச் சம்பளம் அளித்தனர். உபகாரச் சம்பளம் பெற்ற ராமகிருஷ்ணன் சென்னை மெடிகல் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்காகச் சென்னை சென்றுவிட்டான். இதற்க்கிடையில் தமது ஒரே மகளான கல்யாணியைக் கல்லூரியில் படிக்கவைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவளை இன்டர்மீடியட்டில் சேர்த்திருந்தார். ரகுநாதன் அவ்வப்போது மாதா மாதம் சிறு தொகையை ராமகிருஷ்ணனுக்கு அனுப்பி வந்தார். அதுவே அவ னுடைய இதரச்செலவுகளுக்குப் போதுமானதாக இருந்தது.

இவ்வாறாக எவ்வித சலனமுமற்று ஆறாண்டுகள் கழிந்தன இந்த ஆறாண்டுகளுக்குள் ராமகிருஷ்ணன் ஒருதடவையாவது திருச்சிக்கு வரவேயில்லை. ரகுநாதன் தம்பதிகள் அடிக்கடி கோடை விடுமுறைக்கு வந்து போகும்படி கூறினர்கள். ஆனல் ராகிருஷ்ணன் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு விடு முறைக்கு வரவேயில்லை. இதற்குள் தமது ஒரே மகள் கல்யாணிக்கு விவாகம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் இண்டர் தேறி னதும் அவள் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதற் கிடையில் டாக்டர் பட்டம் பெற்றராமகிருஷ்ணனுக்குச் சென்னை மெடிகல் கல்லூரியிலேயே வேலையும் கிடைத்து விட்டபடியால் வேலையும் பார்த்து வந்தான், திடீரென்று திருச்சிக்கு வரப்போவ தாக கடிதமெழுதியிருந்தான் தன் மாமா ரகுநாதனுக்கு. இன்று நடந்ததுபோல் இருக்கிறது அன்று அத்தானை வரவேற்பதற்காக எவ்வளவு அமர்க்களப் பட்டது வீடு. அப்பா அத்தானை அழைத்து வருவதற்காகரயிலடிக்குச் சென்றிருந்தார். அம்மா சமையலறை யில் தட புடலாகக் காப்பி தயாரித்துக் கொண்டிருந்தாள். கல்

யாணியின் முகத்தில் அன்று என்றுமில்லாத மகிழ்ச்சி பொங்கியது. வாயிலில் நின்று அத்தானின் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் கல்யாணி. டாக்ஸி வந்து நின்றது. அப்பாவும் அத்தானும் வந்திறங்கினர்கள். இந்த ஆறு வருட காலங்களுக்குள் தோற்றத்திலும் உருவத்திலும் எவ்வளவு மாறிப்போய்விட்டார் அத்தான்என்றுமனத்தினுள்எண்ணியவளாய் உள்ளேசென்றுள். ராமகிருஷ்ணனுக்கும் ஒரே வியப்பாக இருந்தது. ஆறு வருடங்களுக்கு முன் பார்த்த பால கல்யாணியா இவள்! இல்லை பருவம் அவளுக்கு அழகையூட்டி யௌவனம் அவள் உடலுக்கு மெருகு கொடுத்திருந்தது. இப்போது அவள் பதினெட்டு வயது பருவ மங்கை. செடியிலிருந்து பறிக்கப்படாத அன்றலர்ந்த ரோஜாமலர் அவள். ராமகிருஷ்ணன் வந்து நாலைந்து தினங்கள் சென்று விட்டன. 'பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ' என்பது போல ஆறு வருடங்கள் பேசாத பேச்சைத் தங்கள் கண்களினல் பேசிக் கொண்டார்கள். இவர்களின் நட்பைக்கண்ட ரகுநாதன் தம்பதிகள் அவர்களைக் கூடிய சீக்கிரத்தில் தம்பதிகளாக்கிவிட நினைத்தனர். கல்யாணியை மணந்து கொள்ள ராமகிருஷ்ணனுக்கு பரிபூர்ண சம்மதம். கல்யாணியைக் கேட்பானேன், அவளுக்கும் பரிபூர்ண சம்மதம். அதிகம் வளர்த்துவானேன்.

இதற்குப் பிறகு கல்யாணி ராமகிருஷ்ணன் இவர்களுடைய திருமணம் நிச்சயம் செய்யப் பட்டது. ஒரு நல்ல சுப தினத்தில் கல்யாணியின் கைபிடித்தான் ராமகிருஷ்ணன். ரகுநாதன் தம்பதிகளும் ராமகிருஷ்ணன் சொந்த மருமான் தானே என்றில்லாமல் தங்கள் சக்திக்கு மீறியே கொஞ்சம் கடன் வாங்கியே தங்களது ஒரே பெண்ணின் விவாகத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினர். இன்றுபோல் அன்று கல்யாணியின் ஊர்வலம் இருந்தது. ரகுநாதன் மாயவரத்திலிருந்து இரட்டை நாதஸ்வரக் கச்சேரியாளர்களை வரவழைத்திருந்தார். மோட்டார் வாகனத்திற்குச் செய்யப் பட்டிருந்த அலங்காரமும் பலவித வாண வேடிக்கைகளும் சந்தணக்கிண்ணியையும் தட்டுக்களையும் ஏந்தியவாறு முன்னும் பின்னும் உற்ருர் உறவினர் புடை சூழ அத்தான் அருகில் அமர்ந்து பட்டணப் பிரவேசம் வந்த காட்சியை இன்று நினைத்தால் கூட அவள் மனத்தில் ஒரு பெருத்த மகிழ்ச்சியையே ஊட்டுகின்றது. "அப்பப்பா, இந்த ரகுநாதன் வீட்டுக் கல்யாணம் இந்த திருச்சியை அல்லவா இரண்டாக்கிவிட்டது. அவர் நடத்தின ஊர்வலம் ஒன்றே போதுமே! பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாக அல்லவா யிருந்தது!" என்று ரகுநாதன் வீட்டுக் கல்யாணத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டார்கள் ஊர் மக்கள். விவாகமான சில தினங்களுக்கெல்லாம் கணவனுடன் குடித்தனம் செய்யச் சென்னைக்கு வந்துவிட்டாள் கல்யாணி பால்யத்திலே ஊன்றிவிட்ட அவர்களது நட்பானது விதை முளைத்துச் செடியாவது போல விவாகத்திற்குப் பிறகு மேலும் மேலும் ஓங்கி வளர்ந்தது.

இராமகிருஷ்ணன் தம்பதிகள் வெகு அன்யோன்யமாக வாழ்க்கையை நடத்தலாயினர். இவ்வாருக எவ்வித இன்னலு மின்றி இரண்டுகள் ஓடி மறைந்தன. அப்பொழுதுதான் யாரும் எதிர் பாராத அச்சம்பவம் நடைபெற்றது. கேஸ் விஷயமாக வெளியூர் சென்றிருந்த ராமகிருஷ்ணன் சென்னைக்குத் திரும்பி வருகையிலே எதிர்பாராத விதமாகக் கார் விபத்துக்குள்ளாகி அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஓடோடியும் வந்தனர் ரகு நாதன் தம்பதிகள். கல்யாணியின் துயருக்கு ஓர் அளவேயில்லை. அழுது புலம்பினுள். தான் இனி உயிருடன் இருக்கப் போவதில்லை என்று கூறினுள். ரகுநாதன் தம்பதிகளும் ஆழ்ந்த துயரத்தில் மூழ் கினர். கடைசியாகக் கல்யாணிக்கு ஆறுதல் கூறித் தங்களுடன் திருச்சிக்கு அழைத்துப் போவதாகக் கூறினுர்கள். பிறகு என்ன? ஆனல் கல்யாணியோ தான் இனித் திருச்சிக்கு வரமுடியாதென் றும், சென்னை பெண்கள் கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. படிக்கப் போவதாகக் கூறிவிட்டாள். அதன்படியே சென்னைப் பெண்கள் கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. படிக்கலானுள்.

கல்யாணியின் கல்யாணத்தினுல் அதிகக் கடனில் பாதிக்கப் பட்டிருந்த ரகுநாதன் தம்பதிகள் தங்களுக்கிருந்த சொற்ப ஆஸ் தியை விற்றுக் கடனை அடைத்துவிட்டு வீட்டை விற்று ரொக்க மாக்கிக்கொண்டு சென்னையில் குடியேறினுர்கள். இப்பொழுது கல்யாணி பி. ஏ. பட்டம் பெற்று எல். டி. பட்டம் பெருவதற்காக ஆசிரியர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். மன நோயி னுல் பாதிக்கப்பட்டிருந்த ரகுநாதன் தம்பதிகள் ஒருவருக்குப்பின் ஒருவராகக் காலமானுர்கள். இதற்கிடையேதான் கல்யாணி எல். டி. பட்டமும் பெற்றுச் சென்னை 'பாரதி வித்யாலயம்' என்ற பெண் கள் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியையாக வேலை பார்த்து வந்தாள். இப்படியும் அப்படியுமாகப் புரண்டு படுத்த அவள் உள் ளத்திலிருந்து ஆழ்ந்த பெருமூச்சொன்று வெளிப்பட்டது. சிந் தித்துப் பார்த்த கல்யாணியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர்த்துளிகள் உதிரந்து வழிந்தன. அவள் சிந்தனையைக் கலைப்பது போன்று கடியாரம் நான்கு முறை அடித்து ஓய்ந்தது. இப்பொ ழுது வெகு தூரத்தில் நாதஸ்வரக் கச்சேரி கேட்டது.

❀❀❀

நட்சத்திர மண்டலம்

பேபி சத்யலக்ஷ்மி

பிரசித்தமாக பரத நாட்டியம் செய்து வருகிறார்.

198725

சிறுவர் பகுதி

பஞ்ச தந்திரக் கதைகள்.

பஞ்சதந்திரக் கதைகள் தெரியுமா உங்களுக்கு? ரொம்ப, சுவாரஸ்யமாயிருக்கும். நல்ல நீதிகள் உபதேசிக்கும். யோசிக்க, யோசிக்க, அறிவை விருத்திசெய்யும். வாழ்க்கையில், மிக மிக உபயோகப்படவல்லது- கேட்பதற்கும், படிப்பதற்கும் இனிமையாயிருப்பதோடு, அனுஷ்டிப்பதற்கும் ஏற்றது. ஆராய்ச்சிகளுக்கும் அருமையானது. சிறுவர்களைப்போலவே, வாலிபர்களும், வயோதிகர்களும்கூடப் பஞ்சதந்திரம் படித்துப் பயன் பெறலாம்.

இந்தப் பஞ்சதந்திரக் கதைகள் உண்டானவிதம் தெரியுமா? முன்னொரு காலத்தில், பாடலிபுரம் என்ற ஊரில், சுதர்சனன் என்ற அரசன் இருந்தான். அவனுடைய பிள்ளைகள். சுத்த மூடர்களாயிருந்ததால், அவன் ரொம்ப வியசனத்துடன் தன் மந்திரிகளைக் கூட்டி

'கல்வியும், தர்மசிந்தையுமற்ற பிள்ளைகள் பல இருந்தென்ன பிரயோஜனம்? வேதசாஸ்திரமறிந்த குணவானை ஒரே பிள்ளையிருந்தாலும் அவனால், அந்தக் குடும்பத்திற்கே பெருமையும், சுகமும் ஏற்படும். ஆகவே, என் பிள்ளைகளுக்கு, நீதிசாஸ்திரோபதேசம் செய்து, சற் குணவான்களாக்க, எந்த மகா புருஷன் இருக்கிறானோ!' என்று கவலையுடன் கேட்டான். அப்பொழுது, சோமசன்மா என்ற சகல சாஸ்திரவல்லவன், முன் வந்து, 'இவர்களுக்குச் சமானமான அறிவுடையவரே இல்லை' என்னும்படி ஆறு மாதத்திற்குள் செய்து விடுவதாக அரசனுக்கு உறுதி கூறி, ராஜகுமாரர்களைத் தனதில்லத்திற்கு அழைத்துப்போய் விட்டான்.

சோமசன்மா, ராஜகுமாரர்களைக் கூட்டி, 'உங்களுக்கு, வேடிக்கையாகச் சில கதைகள் சொல்லிக் கொண்டே வருகிறேன் கேட்கிறீர்களா?' என்றான். ராஜகுமாரர்களும், 'கதையா? என்ன கதை? சொல்லுங்கள், கேட்கிறோம்,' என்று ஆவலுடன் கதை கேட்க உட்கார்ந்தார்கள்.

சோமசன்மா:— பஞ்சதந்திரக் கதைகள் சொல்லப் போகிறேன்.

ராஜகுமாரர்:— பஞ்சதந்திரமென்றால் என்ன?

சோமசன்மா:—ஐந்துவிதமான தந்திரங்கள். இதைத்தெரிந்து கொண்டால், வாழ்க்கையில், எந்தக் காரியத்தையும் வெற்றியுடன் சாதித்த, புகழுடன் விளங்கலாம்.

ராஜகுமாரர்:— அதென்ன ஐந்து தந்திரங்கள்?

சோமசன்மா:— மித்ரபேதம்; சுகிர்லாபம்; சந்தி விக்ரகம்; அர்த்த நாசம் அல்லது லப்தஹானி; அசம்பிரேட்சியகாரித்வ. இதுதான் ஐந்து தந்திரங்கள்.

ராஜகுமாரர்:— ஒவ்வொன்றையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

சோமசன்மா:— கேளுங்கள்: மித்ரபேதம் என்றால், ஒருவருக்கொருவர் கொண்டுள்ள சிநேகத்தைக் கெடுத்துப் பகைமூட்டுதல். சுகிர்லாபமாவது, தனக்குச் சரிசமானமானவர்களைத் தேடிக் கூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருத்தல். சந்திவிக்கிரகமாவது, பகைவரையடுத்து, அவருடன் உறவு கொண்டாடி, அவரை வெல்வது, அர்த்த நாசமென்றால், கையிற் கிடைத்த பொருளை அழித்தல். அசம்ப்ரேட்சிய காரித்வமென்பது, ஒரு காரியத்தைத் தீர விசாரியாமற் செய்தல். இந்த ஐந்தும் பெரிய தந்திரங்கள். முக்கியமாய் உங்கள்போன்ற அரசகுமாரர்கள் தெரிந்து கொண்டால், புகழுடனும், வெற்றியுடனும் வாழலாம்

ராஜகுமாரர்:— அப்படியானால், இந்த ஒவ்வொரு தந்திரங்களையும் விளக்கும் கதைகளை விவரமாகச் சொல்ல வேண்டும்.

சோமசன்மா:— அப்படியே சொல்கிறேன். கவனமாய்க் கேளுங்கள்.

இப்படிக்காக சோமசன்மா, அரசன் பிள்ளைகள் மனதுள், இக் கதைகளை கேட்க ஆசையெழுப்பி, இந்த ஐந்து தந்திரங்களையும் விளக்கிப் பயன் பெருங் கதைகளைச் சொல்லலானான். இந்தக் கதைகள் ஆதியில் ஸம்ஸ்கிருத பாஷையில் சொல்லப்பட்டு, எழுதப்பட்டன. இது, ஒரு பெரிய நூலாகி, உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு யாவராலும் புகழ்ந்து, பயன்பெற படிக்கப்பட்டு வருகிறது. அந்தக் கதைகளுள், ஒவ்வொரு தந்திரத்தையும் விளக்கும் ஒவ்வோர் கதையை, உங்களுக்கு சொல்லி வருவோம். நீங்களும், சாவதானமாகப் படித்து, அறிவு வளர்ப்பீராக. ஒரு காட்டிலே, பிங்களன் என்ற சிங்கமும், சஞ்சீவகன் என்ற எருதுங் கூடி வெகு ஒற்றுமையாக வாழ்ந்துவந்த சிநேகத்தை, கோட் சொல்லுதலும், உலோப குணமுமுள்ள தமனகன் என்ற நரி, தந்திரமாய்க் கெடுத்த மித்ரபேதக் கதையை அடுத்த இதழில் படியுங்கள்.

சிரித்துப்பார்

வந்தவன்:— ஸார்!— ஸார்!—

வீட்டுக்காரன்மனைவி:— அவர் இல்லை- வெளியே போயிருக்கார்.

வந்தவன்: — எங்கே போயிட்டார்?

வீட்டுக்காரன்மனைவி:— எனக்குத் தெரியாது.

வந்தவன்:— அட ராமா! யமனுக்குத் தெரியாமலா, உயிர் போயிருக்கு.

புருஷன்:— இந்த வீட்டிலே யிருக்கிறதைவிட, நரகத்திலே போய், நாலுநாள், சும்மா இருந்துட்டு வரலாம்.

மனைவி:— ரொம்ப நல்ல யோசனைதான் அது. நானும் கூடவரேன் புறப்படுங்கோ.

புருஷன்:— அப்படியின்னா, அங்கே போவானேன்.

கமலா:— இதோ, உங்க, தங்கையின் திருமணப் பத்திரிகையை நன்ருகப் படித்தீர்களா?

கணவன்:-- ஏன்? திருமரணப் பத்திரிகை! அட கிரகசாரமே!

கமலா:-- அது கிரகசாரமல்ல. அச்சகஆசாரம்.

அம்மா:-- (பிள்ளையைப் பார்த்து) ஏண்டா, இப்படி எதுக்கெடுத்தாலும் பொய் சொல்றதே பழக்கமாயிடுத்து

அப்பா:-- தாயின் வயிற்றில் பிறக்கும்பொழுது முதலே, நிஜம் என்பது இன்னதென்பதை அறியாதவன், பாவம்- நீயே, ஏன், இப்படிக் கோவிச்சுக்கறே, அவனை......

எலிமிச்சையின் உபயோகம்

எலிமிச்சம்பழமும், நாம் பிழிந்தெறிந்துவிடும் அதன் தோலும் நமக்கு உபயோகப் படும் பல்வேறு பிரயோஜனங்களைக் கவனியுங்கள். உப்போடு கலந்த எலிமிச்சை ரசத்தைக் கொண்டு, வெள்ளை ஆடைகளி னின்றும், பட்டுக்களினின் றும், கறைகளை எடுப்பதும், துணிகளை வெளுத்திடுவதும், யாவருமறிந்ததாகலாம். இதே ரசம் போட்டுத்தேய்த்தால் அலுமினியம் பாத்திரங்கள், பளபளவென வெளுக்கும்—. மீன்களைப் பல நாட்கள், நாற்றமெடுக்காது பாதுகாத்து வைக்க, எலிமிச்சை ரஸம் உபயோகப்படுமென்பதைச்சமீபத்தில் ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

எலிமிச்சை தோலில், பலத்த நெடி வீசும் ஓர் வகை எண்ணை உண்டு. இவ்வெண்ணையின் ஒன்றிரண்டு துளிகொண்டு, ஐம்பதறுபது காலன் தண்ணீருக்கும் வாசனையுண்டாக்கலாம். எலிமிச்சையெண்ணை எஸென்ஸ்கள் பலவித வாசனைத் திரவியங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

பல்லாயிரமாண்டுகளாக, எலிமிச்சம்பழம், அதன் ரஸம், அதன்தோல், எல்லாம், சுரம், தொண்டைக்கட்டு, டான்ஸிலிடிஸ், கீல்வாயு, பலவித வீக்கங்கள், சொரிசிரங்குகள், கயநோய்கள் போன்ற பல்வேறு நோய்களுக்கான கைம்மருந்தாக நமது பாட்டிமார்களால் நமது குடும்பங்களில் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. இதைக் குறித்த வைத்ய நிபுணராராய்ச்சி மட்டும், சமீப காலத்தில்தான் ஓங்கி வருவதாயிற்று.

ரத்தப்பெருக்கைத் தடுக்கவும், பெருகும் ரத்தத்தைக் கட்டிடச் செய்யவும் இதனுபயோகம், கடந்த உலக யுத்தத்தில், ஜெர்மன் சிப்பாய்களால், கையாளப்பட்டது; ரத்தமில்லாமை போக்கி, ரத்த ஊற்றங்கொடுக்க ஓர்வித எலிமிச்சை வகை இன்ஜெக்ஷன் கொடுத்துப் பலன் பெறுவதை, அமரிக்கா வைத்ய நிபுணர்கள் கண்டறிந்து கையாளுகின்றனர்—. சீதபேதி, வயிற்றுலே போதல்— இதுகளை நிறுத்திடவும் எலிமிச்சையிலிருந்து புது மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன—.

எலிமிச்சையிலிருந்து இறக்கப்பட்ட ஸிட்ரிக் ஆஸிட், லெமனேட் தயாரிப்பதற்கு அவசியம்—. சமையலின் எலிமிச்சையின் பல்வேறுபயோகம், ஒவ்வோர் குடும்ப ஸ்திரீயும் அறிந்ததுவே—. கைகளுக்கு மிருதுத் தன்மை கொடுக்கவும், கூந்தல் கழுவவும், எலுமிச்சை ரசம்

நன்கு உபயோகப்படும்—: ஊருகாயாகவும், இதர விதத்தில் ரஸத்திற்கும், மற்றும் பலவித மான வாழ்க்கையுபயோகம், யாவருமறிந்ததுவே. பல வித பழவகைகள், காற்றால் கருத்துப்போகாது பாதுகாக்க இப்பழம் பயன்படுகிறது.

எலிமிச்சை இப்படிப்பல விதங்களில் உயிர்த்துணையா யிருப்பதால், ஒவ்வொருவர் தோட்டத்திலும், நன்ருய்க் காய்க்கும் ஓர் எலிமிச்சைமர மாவது இருப்பது அவசியம். எலிமிச்சை இலையும் பழம் போன்ற பல்வேறு மருந்து விதங்களாகவும் உபயோகப் படும்—. எலிமிச்சம்பழத்தோலை, வீணாக எறிந்துவிடாமல், சிறு துண்டுகளாக்கி, வதக்கியோ, வேகவைத்தோ, உப்பு, புளி, காரஞ்சேர்த்துத் துவயலறைத் துச் சாப்பிடுவது, வாய்க்கும் ருசியாயிருக்கும்; உடம்புக்கும் ஆரோக்யந்தருவதாம்—.

குறிப்பு:-- வெண்மதியில் பிரசுரிப்பதற்காக வியா சங்களும், கட்டுரைகள் போன்றதுவும், அனுப்புகிறவர் கள், இரண்டு, மூன்று பக்கங்களுக்கு மேற்படாது, எழுதி யனுப்ப வேண்டும். வேண்டியதற்கான தபால் பில்லை களுடன் அனுப்பப் படாவிட்டால், பிரசுரிக்கப் படாத பிரதிகள், திருப்பியனுப்பப் படமாட்டா. விமர்சனத்திற் காக புத்தகம் அனுப்புவோர், இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

ஆசிரியை.

அருட் கோயில்

ரா. ஸ்ரீ. தேசிகன்

அன்பு மயமாய்த் திகழ்கின்ற ஆண்டவன் அடிகளை நண்ணுவதற்கு அன்பு நெறியைத்தான் பின்பற்ற வேண்டும். இதில் கிழலாகும் சந்தேகமும் இல்லை. அன்பே சிவம் என்று நம் நாட்டுச்சான்றோர்கள் கூறிவருகின்றனர். வைணவர்களில் ஒருசாரார் திருமகள் மூலந்தான் ஆண்டவனை அடையமுடியும் என்ற கருத்தைப் பரப்பி வருகின்றனர். திருமகள் அன்பு மயமானவள். அன்பைக் கொண்டே கடவுள் திருவுள்ளத்தை அறியமுடியும் என்பதுதான் இந்தச்சித்திரத்தில் கோயில் கொண்ட உண்மையாகும். அன்புருவான ஏசுநாதர் தன் வாழ்வாலும் வாக்காலும் போதித்ததெல்லாம் 'அன்பே ஆண்டவன்' என்னும் சத்தியந்தான். உலக நன்மைக்காகத்தம் உயிரைநீத்த ஏசுநாதரின் அன்பு நெறியைப் பற்றினுல்தான் அருட்கோயில் திறக்கும் என்ற கருத்து மிளிர்கினறதன்றோ?

'எல்லாவற்றையும் விட்டு என்னையே தஞ்சமாய் அடைவாயாக. உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கின்றேன். நீ துயரடைய வேண்டாம்' என்பது ஆயர் குல நந்தன் கீதையில் அருளிய உபதேசம். தனக்கென்று வாழாப்பெருந்தகை ஏசுநாதர் சாற்றுவது: "வருந்தி சுமை சுமக்கும் மக்களே, என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு ஆறுதலளிப்பேன்" "என்னில் நிலைப்பெற்றுநில் சிலுவைதாங்கி என்னைப் பின்தொடர்வாயாக" என்பவை. எப்படி இவ்விருஆயர்களின் உபதேசங்கள் ஒன்ருய்க்கரைகின்றன பாருங்கள்.

ஆண்டவனை விட்டுச்சற்று அகன்ருல் அல்லற் கடல்தான் விரியும் என்ற கருத்தைக் குலசேகராழ்வார் ஓர் அழகான பாட்டில் அமைத்திருக்கிருர். கப்பல் பாய்மரத்து உச்சியில் உறைகின்ற ஒரு பறவை அதை விட்டுச்சற்று விலகப்பார்க்கின்றது. ஆனல் அதன்முன் கடலோ அலைக்கு மேல் அலையாய் விரிகின்றது. பிறகு வேறு புகலிடமில்லாமல் அந்தப்பாய்மர உச்சியில்தான் மீண்டும் போய்த் தங்குகின்றது. அந்த மாப்பறவை போன்றேனே என்று அகங் குழைந்து பாடுகின்ருர் ஆழ்வாரும்

வெங்கட்டிண் களி நடர்த்தாய் வித்துவக்கோட்டம்மானே
எங்குப்போயுய்கேன் உன்னிணையடியேயடையலல்லால்
எங்கும் போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும்,
வங்கத்தின் கூம்பேரும் மாப்பறவே போன்றேனே

இப்பாட்டில் ஓர் அழியாச்சித்திரம் அலர்ந்திருக்கக்காண்கின்றோம். டாண்டேயும் (Dante) 'அவன் இச்சையில்தான் கின் அமைதி தங்கி நிற்கின் றது' என்று மொழிகின்ருர். மேலும், நீ

அவனை மறந்தாலும் அவன் உன்னை விடமாட்டான், தடுத்தாட்கொள்ளுவான் என்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடுகின்றனர். இந்தக் கருத்தைபிரான்ஸிஸ் தாம்சனும் (Francis Thomson) தம் தெய்வ வேட்டை நாயில் (The Hound of Heaven) பாடியிருக்கிறார். ஓர் ஆடு சிதறிப்போனாலும் நல்லாயனுக்குத் தூக்கம் வருமா? அதைத்தானே தேடிச்செல்வான் அவன். பசுபதி என்ற சொல்லிலும் நல்லாயன் என்ற கருத்து விளங்குகின்றதன்றோ?. அவன் தன் அருட்பட்டியில் திசை தப்பின ஆடுகளாம் ஆத்மாக்களைக் கொணர்ந்து சேர்க்கிறான்.

பரமபதத்தில் ஆண்டவனுக்குத் தங்கவிருப்பமில்லை அநேக ஆத்மராசிகள் பிறவிச்சேற்றில் உழன்று தவிக்கின்றனவே அவைகளை மீட்கவேண்டாமா? என்ற கருணையால் கீழே இறங்கி நம்மிடையே நடமாடுகின்றான். அதற்குத்தான் அவதாரமென்று பெயர். நம்மாழ்வாரும் அவதார ரகசியத்தைத் தம் திருவிருத்தத்தில் முதல் பாட்டிலே அருளியுள்ளார். அவன் நமக்காகப் பிறக்கின்றான். நம் பிறவி நோய் தீர்க்கத்தான் அவதாரம் செய்கின்றான். உலகம் உய்யத்தம் உயிரை நீத்த சான்றோர்களெல்லாம் அவன் அவதாரங்களல்லவா?.

'மெய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை யினியாமுறாமை உயிரளிப்பான
என்னின்றயோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா,
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே.

இப்பாட்டைத் துருவி ஆராய்ந்தால் உண்மை புலனாகும்.

உலகத்தின் துன்பச் சுமைகளைத்தாமே தாங்கி நிற்கின்றனர் சான்றோர்கள். பிராமெத்தயூஸ் உலகநன்மைகளுக்காக அநேக இன்னல்களை அடைந்தார். ஏசுநாதர் உலகம் உய்யச் சிலுவையில் உயிர் நீத்தார். நாயிக்கு அமரர் வாழ்வு அளித்தால்தான் தாமும் பரமபதத்தில் நுழைவதாகத் தர்மபுத்திரர் இயம்பிய சொல்லில் எத்தனை பெரிய தத்துவம் அடங்கியிருக்கிறது பாருங்கள். எல்லா ஜீவராசிகளும் உய்கிற வரையில் தமக்கும் பிறவி வேண்டும் என்று கருணையால் ஒரு பௌத்தர் சொன்னாராம். மனிதன் தனித்து இன்புற முடியாது. ஓர் ஓலங்கெட்டாலுஞ்சரி, ஒரு முனகல் எழுந்தாலும் சரி உலக அமைதி குலைந்துபோய்விடும். ஆர்னால்ட் மூன்றுவிதமான மாந்தர்களைக் குறிக்கின்றார்— நெறியறியாது படிகிற மாக்கள்; தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுகிற மக்கள்; தங்களையும் காப்பாற்றிக் கொண்டுபிறரையும் உய்யும்படி செய்கிற உத்தமர்கள் துக்கத்தைத் துடைத்தே தீரவேண்டும் பிறர் இன்பத்தில்தான் தம் வாழ்வு நிலைபெற்று நிற்கும் என்ற பேருண்மையை அறிந்த பெரி

யோர்கள் இடையருது கைங்கரியம் செய்து வருகின்றனர். கைங்கரியம் என்ற சொல் வைணவர்களிடத்தில் உலாவக்காண்கின்றோம். பரமபதத்தில் போய்ச்செய்யவேண்டிய காரியமட்டுமன்று. ஜீவராசிகளுக்குச் செய்யவேண்டிய பணிவிடைதான் அது. அப்பணியே அவருக்குச் செய்யவேண்டிய ஆராதனமாகும். தாஸன் என்ற சொல்லில் எத்தனை பெருமை இருக்கிறது தெரியுமா? முன்னணியில் நிற்க விரும்பினால் பணியாளராய் நிற்பாயாக என்ற நல்லாயன் உபதேசம் நம் நினைவுக்கு வருகின்றதன்றோ?

இவ்வுலகமனைத்தும் அவன் சரீரமன்றோ?. உடன்மிசை உயிரெனக்கரந்தெங்கும் பரந்துளர் என்று ஆழ்வார் பாடுகின்றார். எவன் துயர் கண்டு கண்ணீர் வடிக்கின்றானோ அவன்தான் உண்மையான வைணவன். ஒவ்வொரு உண்மையான கிறுஸ்துவனிடம் ஓர் உண்மையான வைணவன் விளங்கக் காணலாம். அருட்கோயில் அங்கே இல்லை. இவ்வுலகையே ஒரு பெரும் அருட்கோயிலாகச் சமைக்கத்தொண்டரெல்லீரும் வாரீர் 'அதோ சங்கநாதம் கேட்கின்றது. வருவீர்' வருவீரே

'ஒக்கத்தொழுற்விற்றாராகில் கலியுகமொன்றுமில்லையே'
என்று ஆழ்வார் பாடிய பாட்டிற்கு என் உள்ளமும் எதிரொலி கொடுக்கக்காண்கின்றேன்.

P.C.I.

CIGARETTE SWEETS

Provincial Cottage Industries

100, Seven Wells street, Madras-1.

நீங்கள் கேட்டீர்களா?







பாலே வனக் காற்றிலி ருந்து, குடி நீர் இறக்க வல்ல சாதன மொன்றை ஸ்வீடன் தேசத்தவரொருவர் கண்டு பிடித்துள்ளார். சூர்யாஸ்தமனப் பின்புபாலேவனத்தில் இரவு முழுதும் ஒரு 'க்வார்ட்' அளவு குடி நீர் சேருமாம்.

லியோன் ஜால்ஸன் என்ற போலண்டு தேசத்தவர், ஏழு வருஷம் முன் யுனைட்ட ஸ்டேட்ஸுக்கு 6 டாலருடன் வந்தவர், இடாலி, ஸ்விஸ் தேசத்திய தையல் மிஷின் கனைக் கூட்டு விப்ப தாலேயே 50 மிலியன் டாலர்கள் சேகரித்து விட்டாராம்.

குதிரை, தத்காலத்திய உருவமாகப்பரிணமித்திட 40 மிலியன் வருஷங்கள் ஆகினவாம். முதல் முதலாக அறியப்பட்ட குதிரை, ஓர் முயலவ்வளவு பெரிதாகவும், குளம்பிற்குப் பதிலாக விரல்களோடுமிருந்ததாம். இதை இயோஹிப்பஸ் என்பார்கள்.

பத்மஜா

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூ.
சென்னை-600 008

(ஜெயஸ்ரீ)

அவள் கண்களுக்கு அவன் ஓர் உயர்தர லட்சியவாதி. பெற்று வளர்த்த தாய்க்கே புரியாத மனப்பான்மை. ஒரே பெண்ணாகவும் இருந்து விட்டால் அருமை பெருமைக்கு கேட்க வேண்டுமா? விமரிசையாக நடத்த திட்டமிட்டிருந்த தாயின் எண்ணங்கள் பொடிப் பொடியாகின. வேறு வகையின்றி அவனை மருமகனாக ஏற்கத் துணிந்து விட்டாள். ஏற்றும் விட்டாள். சுவாமியின் சன்னதியில் நடக்கும் ஆடம்பரமற்ற அமைதியான புனிதமான விவாகம் உயர்தர லட்சியம் யென்கிற திரையின் மறைவில் நடந்தேறி விட்டது, படித்துப் பட்டம் பெற்ற தம்பதிகள்... எனவே கலியாணம் முடிந்ததுமே வடக்கே உல்லாச யாத்திரை புறப்பட்டுச் சென்று மூன்று மாதம் கழித்து திரும்பியும் விட்டனர்.

மனைவி பத்மஜாவை விட்டு விட்டு மீண்டும் எதோ வியாபார நிமித்தமாக சுரேந் வெளியூர் பிரயாணத்தைத் தொடங்க பிரியா விடை பெற்றான் தன் காதலியிடம்.

பத்மஜாவின் தந்தை பிரபலமாக இரும்புத் தொழில் வியாபாரம் செய்து ரொக்கமாக ஐந்து லக்ஷத்திற்கு அவளை வாரீசாக ஏற்படுத்தி மறைந்து சொற்ப வருஷங்களே ஆயின. அவள் தாய் மிகவும் கெட்டிக்காரி. உலக அனுபவம் பெற்றவள். ஆனால் மகள் விஷயத்தில் அன்பின் பெருக்கில் அவளிடம் காணப்பெற்ற சில குறைகளைக் கண்டிருக்கும் திறமையை யிழந்தாள். நவீனப் போக்கில் எல்லையைக் கடந்து நவவீர நாரீமணியாக நிமிர்ந்து நடக்கத் துணிந்து வரம்பின்றி பலபேரிடையும் பழகி வரலானாள், அந்தப் பழக்கத்தின் நட்பினனாக சுரேந் அவளை மயக்கி விட்டான். அப்போதையின் சுய நல வெறியில் குடும்ப கண்யம் கௌரவம் எல்லாவற்றையும் மறந்து, துணிச்சலுடன் முன் பின் அறியாத சுரேந்நுடன் வாழ்க்கையைத் துவங்கி விட்டாள். வடக்கே பெரிய ஜமீன் குடும்பததைச் சேர்ந்ததாக சுரேந் சொல்லிக் கொண்டு ஆங்காங்கு பிரசித்திப்பெற்ற "கிளப்"களிலெல்லாம் உலவி வந்தான். இந்த அடிப்படையில் துவங்கிய நட்பு பத்மஜா சுரேந் மணவினையில் முடிந்து நின்றது.

வந்திருந்தவன் நம் பழக்க வழக்கத்திற்கே புதியவன் போல தோன்றினான். நம் பாஷையிலும் சரியாக உச்சரிக்க முடியாமல் ஒருவாறு பேசினான்.

தலையை தாழ்த்தி வணக்கம் தெரிவித்தான். பத்மஜாவின் தாய் அந்த அந்நியனை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லி தானும் சற்று தொலைவில் அடக்க வொடுக்கமாக வேறொன்றில் உட்கார்ந்து விஷயத்தை தெரிவிக்க வேண்டினாள்.

"சுரேந்!......இருக்கிறாரா?"

"இல்லை......என்ன விஷயம்." அவள் உள்ளம் காரணம் புரியாமல் நடுக்குற செய்தது.

"அவர் சம்சாரம்?"

"அவள் உடம்பு சரியில்லை. பிறருடன் பேசும் தென்பு இல்லை. அவள் என் பெண்தான். எதுவானாலும் என்னுடன் சொல்லுங்கள்." என்றாள் சற்று மனதை திடப்படுத்திக் கொண்டு.

"இதோ இந்தப் பத்திரிகையைப் படித்துப் பாருங்கள்...... நான் இரகஸிய இலாகாவைச் சேர்ந்தவன்," யென்று கூறியவாறு பத்திரிகையை நீட்டினான். அது அவள் மருமகன் தருவிக்கும் "ஜயந்தி" யெனும் வட நாட்டின் வெளியீடு. ஆங்கிலப் பத்திரிகை. சிறிதாகக் கூட்டிப் படிக்க முடியும், ஆகையால் அவன் குறிப்பிட்ட விஷயத்தை படித்தாள்.

', ஜல தாரா வந்து சேர்ந்தது. அதில் ஜமீன்தார் வீரசிங்ஜியின் மகன் சுரேந் வருகிறார்....."

அவள் கண்கள் பஞ்சடைந்தன. மார்பின் படபடப்பினால் மூச்சே நின்று விடும்போல இருந்து. கைகள் நடுங்கின. விஷயம் புரியாமல் தத்தளிக்கும் நோக்குடன் அந்நியனைப் பார்த்தாள் அவனும் யூகித்தான். சமாசாரத்தைப் புரியவைத்தான்.

"சில வாரங்களுக்கு முன்பு உங்கள் மருமகன் சுரேந் ஜமீன் விஷயமாக வந்திருந்தார், அவர் மேலை நாடுகளுக்குச் சென்று சுமார் பதினைந்து வருஷத்திற்கு மேலாகியிருக்கும். எதிர்பாராத அவர் வரவு அவருடைய சகோதரிகளுக்கு ஆச்சரியத்தை கிளப்பி விட்டது. இருந்தும் உண்மை உணர அவர் இருப்பிடத்திற்கு தந்தி அடித்தனர். அவர் அங்கே இருப்பதாகவும், சீக்கிரமே புறப்பட ஏற்பாடு செய்திருப்பதாகவும் செய்தி கிடைத்தது. ஜமீன் நிர்வாகிகள் எங்களுக்கு விஷயத்தை தெரியப் படுத்தி அந்தப் போலி சுரேந்னைப் பிடிக்க ஏற்பாடு செய்தனர். பிறகு நாங்கள் புலன் விசாரித்து ஆராய்ந்ததில், விவரம் ஒன்று கிடைத்திருக்கிறது.

"சதாநந்தன், கௌரவ குடும்பத்தில் வந்தவன்; படித்தவன். பார்வைக்கு கண்யமாக தோன்றுபவன். குடும்பத்தில் அவனை சேர்த்துக் கொள்ள மறுத்தனர் உற்றார். சிறந்த கபட நடிகன். வட தேசத்து இளைய ஜமீன்தார் சுரேந் போன்ற முக வெட்டு உடையோன் சுமார் இருபதாவது வயதில் போலி

கையெழுத்திற்காக தண்டிக்கப்பெற்று வெளிவந்தவன்.........
இதை தவிர பல குற்றங்கள் அவன் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. என்ன சொல்லுகிறீர்கள்? தங்கள் மருமகன் சுரேந் ஒரு பெரிய குற்றவாளி. அவனைக் கைது செய்ய வேண்டும்........கௌரவமான இந்தக் குடும்பத்திற்கும் உலை வைத்தான் பாவி......"

பத்மஜாவின் தாய் என்ன சொல்ல முடியும்? கண்ணீர் மல்க விம்மினாள், பிறகு சுருக்கமாக வருத்தத்துடன் கூறினாள்.

"சட்டப்படி நீங்கள் செய்வதை நான் தடுப்பது முடியாது, ஆனால் ஒன்று கூற விரும்புகிறேன். என் பெண் மிகவும் பல ஈன நிலையிலிருப்பதால் உடனே இப்பொழுது அவளிடம் இவைகளைப்பற்றி சொல்லப்போவதில்லை. அப்பொழுது சமாசாரம் ஏதாவது கிடைக்குமானால் தெரிவித்து விடுகிறேன். மன்னித்து விடுங்கள்," யென்றாள்.

மறுதினம் வந்து பார்த்துச் செல்வதாக விடைப் பெற்று சென்றான் அந்த இரகசிய போலீஸ் அதிகாரி. "மேலும் உண்மை அறிய வேண்டுமானால் அவன் முதுகில் "ச" யென்கிற எழுத்து பொரிக்கப் பெற்றிருக்கும். பாருங்கள்" யென்றும் எச்சரிக்கை செய்திருந்தான்.

வாய் விட்டு "ஓ" வென்று அழுது ஓய்ந்தபிறகே, தன் மகளைக் காண மாடிக்குச் சென்றாள். பூர்ண கர்ப்பிணி ஆன அவளிடம் சமயம் பார்த்து விஷயத்தைக் கூற தீர்மானித்து விதியின் விபரீத போக்கைக் கண்டு பொருவியபடியே நடந்தாள். இச் சம்பவத்திற்குப் பின் "சுரேந்" வீட்டிற்கு வரவேயில்லை.

சுரேனைக் காணாமல் தவியாக தவித்தாள் பத்மஜா. தாயின் சமாதானம் அவளை சாந்தப் படுத்த முடியவில்லை. பொழுது போக்கிற்காக வரும் பத்திரிகை ஒன்றில் சுரேந் சரிதம் பூராகவும் பிரசுரிக்கப்பட்டு, விசாரணையின் தேதியையும் போட்டிருப்பதை தற்செயலாக கவனித்ததுதான், பத்மஜா தன்னுணர்வை இழந்தாள். எத்தகைய பெரும் அதிர்ச்சி. உடனே டாக்டர் தருவிக்கப்பட்டார். வெகு ஜாக்கிரதையாக அவளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதே நிலையில் குழந்தை, அதுவும் பெண் குழந்தை பிறந்தது. பத்மஜா சுய உணர்வு பெறவேயில்லை. மூன்றாம் நாள் ஜன்னி கண்டு "சுரேந்" னிடம் தான் கண்டானந்தித்த இன்பங்களைப் பிதற்றியபடியே மறைந்தாள்.

ஒரு தினம் இறந்த பத்மஜாவின் விலாசத்திற்கு ஒரு கவர் வந்தது. அதை வேண்டா வெருப்புடன் பிரித்து படித்தாள் அவள் தாய்.

பிரிய பத்மஜா,

எனக்கு எழுதவும் கை கூசுகிறது. ஆனாலும் கடைசி முறையாக எழுதினால் நான் நிம்மதி பெறுவேன். இன்று வருந்துகிறேன் என் செய்கைக்கு. அறிவை நேர் வழியில் செலுத்தியிருந்தால் பத்மஜாவுடன், என் குழந்தை ஸ்ரீமதியுடன் தலை நிமிர்ந்து நடக்க மாட்டேனா! இன்று என்னால் எவ்வளவு தலையிறக்கம்! கணவன் ஒரு திருடன்யென்று உனக்கு. திருடனின் மகள்யென்று அவளுக்கு....... வேண்டாம்......பத்மஜா! என்னைப்பற்றி நீ அவளுக்குச் சொல்லவே சொல்லாதே!...என்னை என்னவோ செய்கிறது......என்னைப் பெற்றோர்கள் மிகவும் செல்லம் கொடுத்து கெடுத்து விட்டார்கள். பணத்திமிர். படித்தேன். ஆனால் கெட்ட வழிகளான திருட்டு புரட்டுகளில் என் திறமையைக் காட்டி நடிப்பதில் தேர்ந்தேன். விஷயம் முற்றிய பிறகு தான் என் பெற்றோர் தப் தவறுதலை உணர்ந்து என்னைக் கண்டித்து திருத்த முயன்றனர். பிறகு என்னை வெளியேற்றினர். அதே ஏக்கம் அவர்களும் மறைந்தனர். அவர்களுக்குப் பிறகு நான் யாரையுமே சட்டை செய்வதில்லை. மனம் போனபடி சாமர்த்தியமாக நடித்தேன்.

உள்னைக் கண்டேன். உண்மையிலேயே மனப்பூர்வமாக விரும்பினேன். என்னிஷ்டம் நிறைவேறிற்று. நாம் ஆனந்தமாக வாழ்ந்தோம். அது என்றுமே யிருக்க முடியாதாயென்று ஆசைப்பட்டேன்......உன்னை ஏமாற்றி உருமாறி யிருந்தாலும் உன்னிடம் தவிர நான் யாரையுமே விரும்பியதில்லை. நீ இன்று என்னை வெறுப்பாய்......எல்லை மீறி நடந்துகொண்ட என்னை சட்டம் என்று தண்டிக்குமோயென்று தினமும் எதிர்ப்பார்த்துத்தான் புது மனிதனாக வாழ நினைத்தேன். ஆனால் நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது வீணாக என் செய்கைகளைப் பற்றி கூறிப் பெருமைப்படவில்லை. இதைவிட்டு வெளியேறும் விருப்பம் எனக்கிருந்தது. ஆனால் இன்று இல்லை. உன்னைப் பார்க்கவே அஞ்சுகிறேன், என் சரித்திரம் முடிந்து விட்டது. என் அன்பு...........உன்னுடைய சுரேந்.

அதைக் கிழித்து விட்டெறிந்தாள். அவள் மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது. சுரேந் தன் பிற்கால வாழ்க்கையின் சரிவிற்குத் தன் பெற்றோரை குறை கூறினான். ஆனால் அவளே!.........தன் தவறுக்கு தானே பலியானாள்.........தாயுள்ளமாகிற தோட்டத்திலே ஸ்ரீமதி யெனும் தங்கள் வாழ்வில் மலர்ந்த சிறு மலர்ச் செடியை நட்டுவித்து சென்றிருக்கிறாள் போலும்!

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாதத்தில் சார்போர்ன் சர்வ கலாசாலையார், பீயருக்கு அளித்த ஆசிரியர் பதவியை அம்மையாருக்களித்தார்கள். இதுதான் அந்நாட்டில் ஒரு பெண்மணியை முதல் தடவையாக ஆசிரியராக நியமித்தது. இதைப் பெண்குலத்திற்கே செய்யப்பட்ட பெருங் கௌரவமாகக் கருதலாம்.

அவருடைய முதல் பிரசங்கத்தைக் கேட்க, ஆசிரியர்களும், மாணவர்களும் பெருந்திரளாகக் கூடினர். அச்சர்வ கலாசாலையின் சம்பிரதாயமாக, புதிய ஆசிரியர் முந்தியவர்க்குப் புகழ்மாலை சூட்டிப் பிரசங்கத்தை ஆரம்பிப்பதை விடுத்து, கூரி அம்மையார், தம்முடைய கணவர் உயிரோடிருந்தால் எந்த விஷயத்தை எந்த வாக்கியத்தைக் கொண்டு ஆரம்பித்திருப்பாரோ, அதே வாக்கியத்தை ஆரம்பித்தவுடன், எல்லோர் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகலாயிற்று. அம்மையாரின் பதிபக்திதான் என்னே!

1911 வருஷத்தில் ஸ்வீடிஷ் விஞ்ஞானக் கழகத்தார், அவருக்கு ரஸாயன நோபல் பரிசை அளித்தார்கள். இரண்டு முறை நோபல் பரிசு பெற்றவர் இவர் ஒருவரே. சார்போர்ன் சர்வகலாசாலையார் ரேடிய ஆராய்ச்சிசாலை அமைத்து அதற்கு கூரி அம்மையைத் தலைவியாக்கியபொழுது, இருபதாயிரம் பவுன் விலைபெறக்கூடிய, ஒரு கிராம் ரேடியத்தை, அவ்வாராய்ச்சி சாலைக்கு நன்கொடையாக அளித்தார் நமது அம்மையார்.

1914-ல் முதல்யுத்தம் தொடங்கியபொழுது, தம்முடைய ஸ்வீகாரத் தாய் நாட்டிற்குச் சேவை செய்யக் கருதி, வைத்தியசாலைகளுக்கு வேண்டிய எக்ஸ்ரே கருவிகளை சேகரித்துக் கொடுத்தும், ரேடிய சிகிச்சை வண்டி தயார் செய்து போர்க்களத்துக்கனுப்பியதோடல்லாமல், தாமே ஒரு வண்டியைப்போர்க்களத்துக்கு ஓட்டியும் சென்றாரென்றால், அவருடைய தேச சேவையையும், தியாகத்தையும், தைரியத்தையும் எங்ஙனம் வியப்பது!

அமெரிக்க பெண்மணிகள், கூரியம்மையைத் தங்கள் நாட்டிற்கழைக்க அங்கு முறையே 1920, 1921 வருஷங்களில்சென்று, அமோக மரியாதைபெற்று திரும்பினார்.

அவருடைய குமாரியும், "தாயைப்போல பெண்ணும், நூலைப்போலச் சேலையும்," என்னும் முதுமொழிக்கிணங்க, விஞ்ஞானத் தொண்டில் ஈடுபட்டு, அவளும் அவள் கணவனுமாக, 1935 வருஷத்திய நோபல் பரிசைப் பெற்றார்கள். ஆனால் மகளும், மருமகனும் பெற்ற இப் பெருமையை, கூரியம்மையார், நேரில் கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லை.

கூரியம்மையார், ரேடியத்தைக் கையாளும்பொழுது, சற்று அஜாக்கிரதையாகவே நடந்துகொண்டுவந்ததால், 1934 வருஷம் நோய்வாய்ப்பட்டு, ஜுலை மாதம், பூதவுடலைநீத்துப் புகழ் உடம்பை எய்தினார். கூரியம்மையின் விஞ்ஞானத் தொண்டு என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமுண்டோ?

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தமிழ்த் தாத்தா என்று தமிழ்க் குழந்தைகளால் அன்புடன் போற்றப் பெறும் ஐயரவர்கள் உண்மையில் சென்ற நூற்றாண்டிலேயே தம்முடைய அரும்பெருந் தொண்டைத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் 1855–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி தோன்றினார்கள். அவர்கள் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர்கள் மறைந்த காலத்தில் (ஏப்ரல், 1942) தமிழ் உயர்ந்து நின்ற நிலைக்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. அவர்கள் 1887–ஆம் ஆண்டில் சீவகசிந்தாமணியை அச்சிட்டு வெளியிட்டார்கள். அதுமுதல் இறுதிக் காலம்வரையில் தமிழ்த் தாயின் அணிகளை ஒவ்வொன்றாகப் புதுக்கும் அற்புதமான தொண்டில் தம் காலம் முழுவதையும் அவர்கள் செலவிட்டார்கள்.

இன்றோ சங்ககாலத் தமிழரைப் பற்றியும், நூல்களைப்பற்றியும் பல பல நூல்கள் வந்திருக்கின்றன. பல வகையான ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று சங்கக் காலத்தைப் போற்றிப் பாராட்டிப் பெருமிதத்துடன் பேசுகிறோம். தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் மரபு என்று நமக்குரிய தனிச்சிறப்பைப் பல மேடைகளில் புலவர் பெருமக்கள் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். பாரத நாட்டில் உயிருடன் வழங்கிவரும் மொழிகள் யாவற்றிலும் பழையது, இலக்கிய வளம் பொருந்தியது, இலக்கண வரம்புடையது, எதையும் வழங்கத்தக்க சொல்வளமுடையது என்றெல்லாம் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளும் நிலை தமிழுக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழ்த் தாத்தாவின் அரும்பெருந் தொண்டு இத்தனை உயர்வுக்கும் மூலகாரணம் என்பதைத் தமிழ்ப் புலவர்கள் அறிவார்கள். தமிழ் வரலாற்றில் ஐயரவர்களுக்கு என்று ஒரு தனிப்பகுதி இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

1942-ஆம் ஆண்டு உலகப் பெரும்போர் நிகழ்ந்தபோது ஐயரவர்கள் தம் குடும்பத்துடன் திருக்கழுக்குன்றம் சென்று தங்கினார்கள். அங்கே ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி அந்தத் தலத்தில் தமிழ்த்தாயின் தவப்புதல்வராகிய ஐயரவர்கள், தாம் பிறந்த காலத்தில் கண்ட நிலையை மாற்றித் தமிழ்மக்களைப் பழந்தமிழ்ச் செல்வத்துக்கு உரிமையுடையவர்களாக ஆக்கி ஆசிகூறிவிட்டு இறைவன் திருவடியை அடைந்தார்கள்.

1942–ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 6-ஆம் தேதி சென்னை அரசினர் கல்லூரியில் ஐயரவர்களுடைய முழு உருவச் சிலையொன்றை நிறுவினார்கள். தமிழ்க் கடலின் விரிவை மீட்டும் தமிழ் உலகத்துக்குக் காட்டிய ஐயரவர்களின் திரு உருவம் பெருங் கடலை நோக்கி நிற்கும் கோலத்தை இன்றும் கண்டு மகிழலாம்.

வருகிற 1955-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி ஐயரவர்கள் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

நமது எதிர்கால வாழ்வுக்கான நிகழ்காலத் தேவை

யுனைடெட் ஸ்டேட்ஸ் தலைவர், வருஷ முதலில், காங்கிரஸ் முன் வந்து, நாட்டின் நிலைமையையும், தான் செய்யப்போகும் காரியங்களையும் சீர்தூக்கிச் சொல்வது, பரம்பரை சம்பிரதாயமான சட்ட ஒழுக்கமாயமைந்துள்ளது. அதன்படி, 6-1-55ல் ஐஸன்ஹவர் விடுத்துள்ள அறிக்கை, பல பொது அம்சங்களில், எல்லாச் சுதந்திர நாட்டார்களாலும் நன்கு தெளியப் படவேண்டியதாகவே அமைந்துள்ளது. இம்மாதிரி சம்பிரதாயம், எல்லாநாடுகளிலும் ஏற்படுவது, உலக நலனுக்கே யென்னவும் சொல்லலாம்.

அறிக்கையின் ஆரம்பத்தில், நம்முள் ஒவ்வொருவரும், அவரவரது தேசிய வாழ்க்கையில் ஓர் முக்யமான அடிப்படையம்சத்தை ஞாபகப்படுத்தி உறுதி கொள்ளவவசியமென்கிறார் ஐஸன்ஹவர்-. அந்த அடிப்படை என்ன? ஒவ்வொரு மனுஷ்ய ஜீவனுக்கும், சுய மதிப்பு, சுயத்திறன், அகற்றவொண்ணா சில தனித்த சுய உரிமைகள் என்றவை, தெய்வீகமாகக் கொடுக்கப்பட்டுள்ள சில அசாதாரண மூலதனங்களென்பதை, ஒவ்வொருவரும் உறுதியுடன் நம்பிக் கௌரவிக்க வேண்டுமென்பதுவே, இவ்வடிப்படை—. சுக சௌக்யங்களுடன் குடிகள் வளர்ந்து வாழ, நாட்டு மக்கள், மேற்சொன்ன சுயேச்சாதிகார மதிப்புக்களை நம்பிக்கௌரவித்தல் அவசியமென ஐஸன்ஹவர் சொல்வதை எவரும் அலக்ஷியஞ்செய்வதற்கில்லைதான்—.

இந்த அடிப்படை நம்பிக்கையுறுதியைப் பீடிகையாக அமைத்துத் தனது வருங்கால திட்டங்களைப் பேசி முடித்த ஐஸன்ஹவர், முடிவிலும் இதே நம்பிக்கையுறுதியைத் தன் பேச்சுரையின் சிகர

மாக வைத்து, அரசுக்கும் குடிகளுக்கும் பொதுப்பட்டதாயுள்ள சிலபொறுப்புக்களை வற்புறுத்துவாராகிறார். அப்பொதுப் பொறுப்புக்கள் யாவை?.

(1) உலக முழுதும் சாந்தி, சுயேச்சை, சத்யம், இவைகள் நிலைத்திட, ஒவ்வொரு நாட்டாரும், ஆஸ்தையோடும், பொறுமையோடும், பக்தி சிரத்தையுடனும் உழைத்தல் அவசியம்.

(2) நாட்டு மக்கள் பூர்ண சுக சௌக்ய வாழ்க்கை நடத்த வேண்டிய வகையில், நாட்டுப் பொருளாதாரங்களை, விருவிருப்பாகவும், கட்டுப்பாடுகளின்றியும் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(3) ஒவ்வோர மனுஷ்ய ஜீவனும், தனது பூர்ண திறன்களையுபயோகித்துப் பயன் பட்டு வாழ்ந்திடும் வசதிகளைக் கொடுத்திட அரசு தீர்மானங் கொண்டிட, அத்தீர்மானத்தைப் பொதுமக்களும், ராஜ்யாதிகாரிகளும், வெறும் வாய்ப்பேச்சால் மட்டுமின்றி, தமது ஒவ்வோர் செயலாலும் சாதித்திட உதவி, ஒத்துழைத்தாக வேண்டும்.

அரசும் குடியும் இப்பொதுப் பொறுப்புக்களைச் சாதித்திட மனங்கொண்டு ஒத்துழைக்குமாகில், நமது உலக எதிர்காலம், ஏன் சாந்தி நிலவும் சுகபோக உலகமேயாகாது?—. கடந்த பல்லாண்டு பல்லாண்டுகளில், பல்லாயிரக் கணக்கான நம் முன்னோர் நமக்கு நமது தேசாசார மதாசாரவொழுக்கங்களைப் பாடுபட்டுத் தேடி வைத்துப் போயுள்ளனர் என்ற சுயமதிப்பும், திடநம்பிக்கையும் அந்த ஆசார ஒழுக்கங்களையே இன்றும் நாம் தைர்யத்துடனும் நம்பிக்கையுடனும் மதித்து அனுஷ்டித்து வரவேண்டுமென்ற சிரத்தையுமே இன்று ஒவ்வொரு நாட்டாருக்கும் வேண்டியது பல பிளவுகள் கொண்ட இப்பெரும் உலகில், பரஸ்பர மதிப்பும், அசூயையகற்றலுமே ஒவ்வொரு சுதந்திர நாட்டாரது உள்ளத்துள் உறுதியாயமைதல் வேண்டுமென, அடித்துக்கூறுகிறார் ஐஸன்ஹவர்.

நமது அரசும், இவ்வழி மனஞ்செலுத்தியுள்ளது, இவ்வருஷத்திய காங்கிரஸில் நன்கு வெளி வந்துதானுள்ளது. உலக அமைதியை, இன்று குலைத்துப் பயமுறுத்துவது, வெறும் பொருளாதார நெருக்கடிகள் மட்டுமல்ல; அரசு வகைத்தான சிக்கல்களும் சச்சரவுகளும் மட்டுமல்ல; ராணுவபல வெறியும் போராட்ட வெறியும் மட்டுமல்ல; அதிகாரப்பதவிப் பித்துமட்டுமல்ல; ராஜ்யப் பெருக்கப் பேராசை மட்டுமல்ல,—. உலகை நிலை குலைத்துச் சாந்தியை பயமுறுத்துவது, மானிடனின் உண்மை மனுஷ்ய சுவபாவமே. மானிடன் என்னப்படுபவன், தெய்வாம்சம் நிறைந்த ஈஸ்வர சிருஷ்டியாகத் தன்னை மதித்து, தன்போன்ற இதர ஈச்வர சிருஷ்டிகளைத் தன்னைப்போலவே கௌரவித்துச் சந்தோஷிப்பித்து வாழ்விக்க

உறுதி கொண்ட உத்தமனாகவாவது இருத்தல் வேவண்டும்—. அல்லது, ஈச்வரஞானமொழித்த, ஆத்மஞானமகன்ற, மிருகாம்சமான சுயநல காரியம் பெருக்கும் யந்திரம் போன்றிருந்து, தனது லாபக்கியாதிகளுக்காகவே பிறர் மதிப்புத்தேடி, அடிமைப்பட்டு உழைத்து அல்லல்படும் லோகாயதனாகவாவ திருக்கவேண்டும்—. இவ்விரு வகைத்தான மனுஷ்ய சுவபாவ போராட்டமே, இன்று, உலக அமைதியை அழிக்கும் வேர்ப்புழுவாகி, நாமுமறியாது நம்மைப் பலவகையில் பிடித்து வாட்டி வருவதாகிறது. இப்போராட்ட ரகசியத்தையறிந்து, பரநலதுவேஷ மொழித்து, பரஸ்பர மதிப்பு பெருக்கும் மனப்பான்மையை மானிடரிடை வளர்த்துப் பெருக்க வேண்டியதே சுதந்திர ராஜ்யத்தார் கடனாகும் இனி.

உலக சாந்திக்கும் சுதந்திரத்துக்கும் உழைக்கும் வழிகாட்டியாகநமது இந்தியா இருக்கவேண்டிய நிலை, நமது இணையற்ற தலைவர் நேருஜியின் கீழ்க்கிட்டப்போகிறது. வழிகாழிட்டியாவதன் முன், நாம் பிறநாட்டார் மதிப்பையும், நம்பிக்கையையும்சங்கையறப்பெறக் கூடிய மாசற்ற தேசத்தாராகத் திகழ வேண்டாமா?-- பொதுநலத்திற்காகச் சுயநலத்தியாகஞ்செய்வது, நம் தலைவர்களிடை, பேச்சளவேயான உபதேசந்தானா?- அனுஷ்டானத்தில் அமுலுக்கு வருவது, ஆகாசக்கோட்டையாகவே இருந்து வந்தால் உலகசமாதான வழிகாட்டி பிருதும் ஆகாசக்கோட்டையாகவேயன்றோ மறைவதாகும்? ஆத்மஞானம், ஆத்ம பலம் ஆத்ம சக்தி— என்ற தெய்வீகமூலதனங்களைப் பிதிரார்ஜிதமாகக் கொண்டுள்ளவர், நமது ஹிந்து மக்கள் ஒருவரே. நாமே நமது பூர்வீகர்களை அவமதித்துப் பரிகசித்துப் புறக்கணித்துவிட்டு, நமது சுய மதாசார குலாசாரங்களை நழுவவிட்டு, பேச்சளவுக்கே ஆத்ம ஞானோபதேசப் பிரசாரம் செய்து, நடத்தையில் மட்டும் இதர மதாசார அடிமைகளாக வாழ்வோமாகில் பிற நாட்டாருக்கு, சுய அனுஷ்டானமற்ற நம்மிடம், மதிப்பு எப்படி ஏற்படக்கூடும்?—. அனுஷ்டானமேயன்றோ, உபதேசத்தைவிடச் சிறந்த சீர்திருத்தச் சாதனமாகுவது!—. மதச்சிறப்பன்றோ மனுஷ்யச் சிறப்பு!-- தத்தம் தெய்வந்தந்த திறனையும், சக்தியையும் பூர்ண அளவில் வெளியிட்டுத் தனது புராதன மதப்பண்புக்கும் தேசப்பண்புக்கும் இடத்த மதிப்பு பெறத்தான் அவரவர் உழைக்க வேண்டும் என்கிறார்ஐஸன்ஹவரே!- நமது ஹிந்து மதாசாரமும் இதுவே.- எனவே, நாமும் நமது பூர்வாசாரங்களைப் புனருத்தாரணஞ்செய்திட உறுதி கொள்வோமாக! நமது அரசும் நம்மை அத்துறை முனைந்திட உதவுமாக! —: நமது ராஜ்யாதிகாரத் தலைவர்கள் மனப்பான்மையும், இவ்வழி திரும்ப வேண்டுவதே நமது எதிர்கால வாழ்வுக்கான நிகழ்காலத்தேவை!

சினிமா உலகம்

புத்தர் வருகிறார்

கௌதம புத்தரின் சரித்திரத்தை மெட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியார் திரைப்படம் எடுக்கப் போகிறார்களாம்.

சித்தார்த்தரின் சரித்திரத்தைப் பற்றிய விவரங்களை இரண்டு வருஷங்கள் இந்தியாவில் இருந்து சேகரித்திருக்கிறார் கதாசிரியர் ராபர்ட் ஹார்டி ஆன்ட்ரூஸ். புத்தமதம் பற்றிய விவரங்களையும், இந்தியா, ஜப்பான், தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் அம்மதம் பரவியதையும் ஆராய்ந்தறிந்து ஆன்ட்ரூஸ் சமீபத்தில்தான் அமெரிக்கா திரும்பினார், அம் மதத்தின் சரித்திரத்தை அவர் அரசாங்கத் தலைவர்களிடமும், மதத் தலைவர்களிடமும் ஆராய்ந்திருக்கிறார்.

தாம் எழுதிய கதையை ஆன்ட்ரூஸ் இலங்கை சர்வகலாசாலைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மல்லசேகராவிடமும், மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடமும் காண்பித்துச் சரியான விவரங்களுக்காகச் சரிபார்த்தார்.

இவ்வருஷமுடிவிலோ, 1956 ஆரம்பத்திலோ, இப்படம் தயாரிக்க ஆரம்பிக்கப்படும். பல்வேறு பிரபல புத்தர்கோயில் கர்ப்பக்கிரகங்கள் உட்புறமும் போட்டோவெடுக்க அனுமதி பெற்றுள்ளார்களாம்.

ஔவையார் திரும்பவும் ஓடுகிறாள்

லைன் தியேட்டரில், ஸ்ரீமதி K B. சுந்தராம்பாள் நடிக்கும் ஔவையார், வோடுகிறது. முன்னர் சென்னையரையும் மாகாணத்தாரையும் மயக்கிவிழுத்த இம் மூதாட்டிப்படம், திரும்பவும் காண்போர் சிந்தையையும், படம் பிடித்தோர் பொக்கிஷத்தையும், படம் ஓட்டுவோர் கல்லாவையும் திருப்திபடச்செய்யுமென்றே நம்பப்படுகிறது.

வள்ளியின் செல்வன்

வெலிங்டன், பிரபாத், ஸரஸ்வதியில் ஓடுகிறது. கதை, விருவிருப்பாகவே யிருக்கிறது. ஹாஸ்ய நடிகையாக சுந்தரிபாய் உணர்ச்சியுடன்தான் நடிக்கிறாள். பிறர் குழந்தையை வளர்த்த தாய், தனக்கே பிள்ளை பிறந்ததும் படும்பாடும், மனோதிடமும் வெகு நன்கு விளக்கப்படுகிறது. தனவான் மனைவியாக நடிக்கும் ஸ்ரீமதி லலிதாவால், சிறுவர்கள்யாவரும், வெகுரம்யமாகவும், வசீகாமாகவுமே நடிக்கிறார்கள். டான்ஸுகள் இல்லாத படமேதான் இல்லையே இந்தக் காலத்தில். அந்த பட அலங்காரமும் நன்கு அமைந்துதான் உள்ளது. வனஜா லலிதா நடனம். ஜெமினியின் வெளியீடு, எல்லாச் சுவை வசீகரமும் பொருந்தித்தானேயிருக்கும்.

நாடும் நடப்பும்

ருஷ்யாவில் பிரதமர் மாறுதல்

ருஷ்யப் பிரதமர் மாலங்காவின் ராஜீனமா, உலக வல்லரசு நாடுகளிடையே மிகுந்ததோர் பரபரப்பை யுண்டாக்கி யுள்ளது. அவர் பதவி மார்ஷல் புல்கான் என்ற ராணுவ வீரர் கைக்கு வந்துள்ளது இப் பரப்பை மிகுத்துக் காட்டுகிறது. இதன் காரணமாக ஐ. நா. சபை செய்துவரும் காரியங்கள், பலரிடை கவலைக்குக் காரணமாகவும் உள்ளது. பார்மோஸா பிரச்னை எப்படித் தீரப் போகிறதோ இனி! உலக யுத்த நெருக்கடிப் பிரச்னையும் திரும்பத் தலைதூக்குவதாகிறது. இந்தக் கலவரத்திடையே பிரிட்டிஷ் ராஜ்ய நிபுணர்கள், நேருஜிதான் மற்றொரு மகாநாடு கூட்டியாவது இந்த நெருக்கடிகளைப் போக்க வழிகாட்டியாக வேண்டுமென்பது போன்ற அறிக்கைகள் விடுத்திருப்பது கவனித்தற்பாலது: உலக சமாதான ஸ்தாபனம், நமது இந்தியாவாலேயேதான் ஆகக்கூடுமென்பதே பல்வேறு வல்லரசுகளுடையவும், சிற்றரசுகளுடையவும் அபிப்ராயம் போலத் தெளிவாகிறது. இதன் ரகச்யம், ஹிந்துக்களுக்கே புராதனமான ஆத்மசக்தி--.ஆத்ம சக்திமுன், அணுசக்தி எம்மாற்றம். பிறநாடுகள் அணுசத்தி பெருக்கட்டும். நாம்மட்டும், ஆத்மசக்தி பெருக்குவோமாக.

தென் இந்தியப் பண்பே தென் அமெரிக்காவில் குடியேறியது

சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் சங்கத்தில், 14-2-55ல், ஸ்ரீ சாமன்லால் செய்த பிரசங்கத்தில், அமெரிக்காது ஆதிப் பண்பாடுகள், தென்னிந்தியாவிலிருந்து வந்தேறியதே யென வெளியிட்டுள்ளார். மெக்ஸிகோவின் அதிகார பூர்வகமான சரித்திரத்தில் எழுதியுள்ளதாவது, 'அமெரிக்காவெனப் பின்னர் அறியப்பட்ட கண்டத்தில் முதல் முதல் வந்து குடியேறியவர்கள், இந்தியாவிலிருந்து கிழக்கே துரத்தப்பட்ட பெருங் கூட்டத்தாரைச் சேர்ந்தவர்களே' தென்னிந்தியப் பண்பாடுகள், இண்டோ சைனு, தாய்லாண்ட், ஜாவா முதலிய இடங்களுக்குப் பரவி, ஹிந்துக்கள், பஸிப்பிக்கடல் தாண்டி, மெக்ஸகோவிற்கும், பெருவிற்கும் வந்து குடியேறியுள்ளார்களாம்: 'கட்டமரம்' என்ற தமிழ்ப்பதமே மெக்ஸிகர் படகுக்கும் பெயராம்: பெரு தேசத்து இன்கா இனத்தினர் பிராமணர்களாம்: அந்நாட்டரசர், பல்லக்கில் தலைப்பாகையுடன் ஊர்வலம் எடுத்துச் செல்லப் பட்டார்களாம். அவரது நான்கு ராணிகளும், அரசன், ஸ்பெயின் தேசத்தாரால் கொலையுண்ட பொழுது, உடன் கட்டையேறினர்களாம்: இவர்கள் சூர்ய நமஸ்காரம் செய்பவர்கள். மெக்ஸிகோ நகரில் பெருத்த கோயில்களில் சிவன், கணேசர், வாமணன், ஹனுமான், லிங்கங்கள் போன்ற விக்ரகங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன. மெக்ஸிகர்கள், சிகை வைத்திருந்தனர்களாம்.

ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மத்திய மந்திரி பதவி துறந்தார்:

மத்திய சர்க்காரில் மந்திரி பதவி வகித்துவந்த ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி, தமது பதவியை ராஜீனமா செய்து, பிரதமர் நேருஜிக்கு கடிதம் எழுதியுள்ளாராம். வெளிநாட்டுப் பிரயாணத்திலிருக்கும் நமது பிரதமர், இந்தியா திரும்பியபின்னரே இந்த ராஜீனமாவை அங்கீகரிக்கக் கூடுமாம். அந்த இடைக்காலத்தில். தான் மந்திரிபதவிக்கான தனது உரிமைகளைக் கொண்டாடப் போவதில்லையென, ஸ்ரீ டி. டி. கி. சொல்லிச் சென்னை வந்துவிட்டாராம்.

வியாபாரத்துறையில் மிகுந்த அனுபவமும், நுண்ணிய அறிவும், பரந்த தேர்ச்சியும் பெற்ற ஸ்ரீ டி. டி. கி போன்றவர், இந்திய வர்த்தக இலாகாவைப் பரிபாலித்தது போலத் திறனுடனும், முன் யோசனையுடனும் நடத்தக் கூடியவர்கள் வெகு சிலரே. இத்தகையாருக்கும், பிரதமருக்கும் அரசியல் அபிப்பிராய பேதங்களேற்பட்டு, அனுபவமிக்க ஸ்ரீ டி. டி. கி--. ராஜீனமா கொடுக்கும் நிலைமையும் ஏற்பட்டது, ஆச்சர்யமே. ராஜீய மர்மம் எதுவாயினும் தென்னிந்தியரொருவர், மத்திய சர்க்காரில் பங்கெடுத்துக் கொண்டு வந்தது, நமக்கோர் பெருமையோடு கூட, நமது க்ஷேம லாபங்களைக் கவனிக்க ஒருவர் இருந்து வருகிறார் என்ற தைரியமும் கொடுத்து வந்தது.

பெருமை கிடக்கட்டும்—. தைர்யம் குறையாதிருக்குமா?—. மத்திய சர்க்கார் மந்திரிசபையில், தென்னிந்தியச் சேர்க்கையில்லாது போமாகில், யூனியன் அரசாட்சிக்கே ஓர் பலக் குறைவு தான் என்று சொல்லத்தான் வேண்டியிருக்கும்.

மெயில் பத்திரிகை ஆசிரியர், ஹெய்ல்ஸ். காலமாய் விட்டார்.

'மெயில்' தினசரியின் போராசிரியர்' ஹெயில்ஸ், காலமானது கேட்க, மிக மிக வருத்தப்படுகிறோம்—. பழுத்த அநுபவஸ்தர்--. திடத்த எழுத்தாளர்—. வசீகர ஸ்பாவம்--. தனக்கு தோன்றுவதைத் தைர்யமாய்த் தயக்கமின்றி அடித்துப் பேசிப் பிரசாரஞ் செய்யும் வல்லமை கொண்டவர். அன்னார் குடும்பத்தாருக்கு, நமது அனுதாபம்.

நமது அனுதாபம்

சென்னை அட்வகேட்டும்' அகில இந்திய கிரிக்கட் போர்டு ஜாயிண்ட் காரியதரிசியாயு மிருந்த ஸ்ரீ. டி. ஸ்ரீநிவாஸராகவன், சமீபத்தில், நாகபுரியில் நடந்த ஆகாய விமான விபத்தில் மரணமடைந்ததைக் கேட்க, மிகவும் வருந்தலாகிறோம். அன்னார் மனைவி ஸ்ரீ. ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸராகவனுக்கு நமது அனுதாபம் மிகவும்

செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்: அவ்வம்மையார் நமது வெண்மதி மலர்களில், 'ஜெயஸ்ரீ' என்ற தலைப்பில், பல சுவை ததும்பும் சிறுகதைகள் எழுதி வந்தனர்.

அகில இந்திய அச்சாளர்கள் மகாநாடு

6-2-55ல் சென்னையில் ஆரம்பமான அகில இந்திய அச்சாளர்கள் மூன்றாவது மகாநாடு வெகு விமரிசையாக நடந்தேறியது. பல்வேறு இடங்களிலிருந்தும் சுமார் .50 பிரதிநிதிகள் மகா நாட்டிற்கு வந்திருந்தனர். இதையொட்டி, ராயப்பேட்டை ஓய். எம். ஸி. ஏயில், அச்சுத் தொழிலபிவிர்த்தி விளக்கும் ஓர் எக்ஸிபிஷனும் நடந்தேறியது. சுதேசமித்ரன் பத்ரிகாசிரியர் ஸ்ரீமான். ஸி. ஆர். ஸ்ரீனிவாஸனவர்கள் தலைமை வகித்தார். சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா, மகாநாட்டைத் திறந்து வைத்தார். ஸ்ரீ எஸ். எஸ் வாஸன் வரவேற்றார். அச்சுத் தொழிலும், சம்மேளனும் தோன்றி வளர்த்த சரித்திரத்தைச் சுருக்கி விளக்கினார் ஆனந்த விகடன் ஆசிரியர். ஸ்ரீ. பிரகாசா அவர்கள், தன்னையும் ஓர்பத்திரிகையாளனெச் சொல்லிக்கொண்டு, அச்சுத்தொழில் உலகிற்குச் செய்யவல்ல பெருந் தொண்டுகளைத் தெளிவுறுத்தினர். தலைவருரையில், அச்சுத் தொழிலாளருக்கும், அரசாங்கத்தாருக்குமான பரஸ்பர பொறுப்புக்களை யெடுத்துக்காட்டி, நமது அரசாங்கம் அச்சுத்தொழில் வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் வகைகளை விளக்கி அதற்றினைப் போக்கிடவேண்டி யுள்ளார், தலைவர் ஸ்ரீனிவாஸன். எக்ஸிபிஷனும், வெளிநாட்டிலிருந்து வந்த சில நவீன யந்திரங்களும் பொருள்களும் கொண்டு மிகச் சிறப்புற விளங்கியது.

ஆந்திராவில் தேர்தல்கள்

அரசியல் வட்டாரத்தார் கவனம், இப்பொழுது ஆந்திர மாகாணத்தில் நடந்துவரும் தேர்தல்களில் ஆழ்ந்து சென்றுள்ளது. ராயலசீமா எலக்ஷன்களில் தான் தீவிர பிரசாரமும் விருவிருப்பும் ஊன்றியுள்ளது. காங்கிரஸ் வெற்றியைக் குலைத்திட கம்யூனிஸ்ட்டுக்கள் வெகுபாடு படுகின்றனர்--. ஆந்திரத் தேர்தல் முடிவு, காங்கிரஸ் கக்ஷி பலத்தின் அறிகுறியென அரசியல் வட்டாரத்தார் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர்--. இந்தத் தேர்தலில், கம்யூனிஸ்ட் கக்ஷியார், அஸெம்ப்ளியில் 42 இடங்களுக்குப் போட்டியிடுகின்றனர்--. நேருஜியும், தேபாரும் ஆந்திர பிரதேசச் சுற்றுதல் வந்து, காங்கிரஸ் பிரசாரம் செய்து போனது காங்கிரஸ் கக்ஷிமீது எத்திறத்தாருக்கும் போராபிமானம் பெருகச் செய்தேயுள்ள தென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எஸ். ஏ. டாங்கேயும், ஏ-கே- கோபாலனும், ஆந்திர நாடுகள் சுற்றி, கம்யூனிஸ்ட் பிரசாரம் செய்தபோதிலும், அவர்களுக்களிக்கப்பட்ட வரவேற்பே கம்யூனிஸ்ட் கக்ஷியிடத்து ஆந்திரர்களுக்குள்ள ஆத்திரத்தை நன்கு காட்டுவதாயிருந்தது: இன்னமும் காங்கிரஸ் வெற்றியைச் சந்தேகிப்பவர்கள், பகலில் பசுவைக் காணமாட்டாதவர்களே. இவர்களாலா இரவில் எருமையைக் காணக்கூடும்?

நூலின் நுட்பம்



ஸ்ரீமந் நாராயணனது கதைகளைத் தினந்தினம் பாராயணம் பண்ணுவோர், இஷ்டபூர்த்தி பெற்று, முடிவில், முக்தி பெறுவாரெனச் சுருதிகள் சொல்வதாகக் கம்பர், கீழ்க்கண்ட படி, ஓர் பாட்டுப்பாடினர்—.

ஆதியரியோ நமநராயணர் திருக்கதையறிந்தனுதினம்
பரவுவோர்,
நீதியனுபோக நெறி நின்று நெடுநாளதினிறந்து செகதண்ட
முழுதுக்
காதிபர்களாயரசு செய்துளநினைத்தது கிடைத்தருள்
பொறுத்து முடிவில்,
சோதிவடிவா யழிவில் முத்தி பெறுவாரெனவுரைத்த சுருதித்
தொகைகளே—'

இந்தப்பாட்டில், முதல் வரியில், நராயணர்—' என்று, காணப் படுகிறதல்லவா.—இலக்கணத்தில், குறுக்கல் விகாரப், என்றிருப் பது, யாவருமறிந்ததுவே. இதையொட்டி, 'நாராயணர்'— என்பதை 'நராயணர்' என்று குறுக்கிப் பிரயோகித்தார் கம்பர்—. இதைக் கண்ட காளமேகப் புலவர், ஸ்ரீமந்நாராயணன் விஷயத்தில் இக் குறுக்கல் விகாரப் பிரயோகத்தைச் செய்தது, ஆராயாது செய்த காரியமென அவரைப் பரிகசித்துக் கீழ்க்கண்ட பாட்டைப் பாடினாராம்.

'நாராயணனை நராயணனென்றே கம்பன்
ஓராமற் சொன்ன வுறுதியால்— சீராக
வாரென்றால் வர் என்பேன் வாளென்றால் வள்ளன்பேன்
நாரென்றால் நர் என்பேன் நான்'—.

புலவர்கள், ஒருவரையொருவர், பொறுமை கொண்டோ பெருமை பரக்கவோ, இம்மாதிரிப் பல சந்தர்ப்பங்களில் பரிகசித் துக்கொள்வதுண்டு. இவ்வகைப்பாடல்களிலும், மதி நுட்பமும் நூலின் பெருமையும், பொதிந்து விளங்குவது, நன்கு அறிதற் பாலதே—.



செல்வரப்பம்

ஸ்ரீரங்கம் தங்கம்மாள்.

'செல்வரப்பம்' என்பதையே' ரொம்பபேர், கேட்டிருக்கமாட்டார்கள். இது, ஸ்ரீரங்கத்தில், ஸ்ரீரங்கநாதன் கண்டருளும், ஓர் தனி பக்ஷணம். வைகுண்ட ஏகாதசி முதல், பத்துநாள் நடக்தேறும் 'இராப்பத்து' உத்சவத்தில்தான், செல்வரப்பம் செய்து, அழகிய மணவாளனுக்கு, அமுது செய்து வைப்பார்கள். உப்பும், புளிப்பும் ஊரிச் சுவைக்த, வாயில் ஊர ஊர, ருசி பெருகும்; நெய் வாசனை கமழும் அபூர்வ அப்பம். செய்வதும், சேர்மானமும் சிறிதும் பிசகுமாகில், கல்லாய்க் கடிக்க முடியாது, ருசியற்றதாகும். ரங்கநாதனுக்கு அமுது செய்யப்படும் இந்தச் செவ்வரப்பத்திற்கென்றே ஓர் தனித்த வாசனையும், ருசியும் உண்டு. எத்தனை நாள்கள் வேண்டுமானாலும், கெடாது, ருசி குறையாது, வைத்திருக்கலாம்.

வேண்டிய சாமான்கள்:—½ படி பச்சரிசி, ⅓ பிடி உப்பு, 10 பலம் நெய், வெள்ளைத் துணி. மாவு சலிக்கும் ஜல்லடை.

செய்யும் விதம்:—அரைப்படி பச்சரிசியை, நன்றாக நொய்யைத் தரித்து விட்டு, ஜலத்தில் போட்டு நன்றாக களைந்து, சுமார் இரண்டு மணி நேரம், ஊரவைக்கவும். பிறகு, நீரை வடித்து விட்டு, அரிசியை உரலிலிட்டு நன்றாக இடிக்க வேண்டும். இடித்து, மாவைச் சலித்து எடுத்து, ஈரத்தோடேயே, ஒரு ஈயப் பாத்திரத்தில், கெட்டியாயமுக்கி, மூடி வைக்கவும். சலித்தெடுத்த கப்பியைத் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். மாவு குறைந்தது ஒரு நாள் முடிய அப்படியே மூடியபடி இருக்க வேண்டும். புளிப்பு அதிகயாக விரும்புவர்கள், இரண்டு நாளைக்கு மூடி வைக்கலாம். பிறகு, அந்த மாவிலிருந்து, ஒன்றிரண்டு பிடி தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும். சலித்த மிகுதி கப்பியை, ஓர் பாத்திரத்தில் போட்டு, சுமார் 1 பிடி உப்பு கலந்து, ஆழாக்கு கெட்டிக் கஞ்சியாகும்படிக்கு, வேண்டிய நீர் விட்டு, அடுப்பில் வைத்துக் கொதிக்க வைத்து, அந்தக் கஞ்சியை, மாவில்விட்

டுக் கலந்து, மாவை, நன்றாகக் கெட்டியாகக் கைகளால், மையப்பிசைந்து கொள்ளவும். இப்படிப் பிசைந்த மாவை, ஓர் எலுமிச்சையளவு உருண்டைகளாக்கி ஓர் தட்டில் வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம், எடுத்து வைத்த விடுதி மாவைத் தொட்டுத் தொட்டு, ஒவ்வொரு உருண்டையையும், உள்ளங் கையில் வைத்துப் பரக்க, வடை வடையாகத் தட்டி, வெள்ளைத் துணியொன்றின்மீது உலரப் போட வேண்டும். இப்படிக்குச் சுமார் ஒரு மணி காலம் ஈரம் வடிய உலர வைத்துப் பிறகு, இரும்புபாணலியில், நெய்யை வைத்துக் காய்ச்சி, ஒவ்வொரு வடையாகப் போட்டு நன்றாகச் சிவக்க பொறித்து எடுத்து, ஓர் பித்தளை டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளவும். அரைப்படி அரிசிக்குச் சுமார் முப்பது, நாற்பது செல்வரப்பம் காணும். நெய்யில் பொரித் தெடுக்கக் கூடாதவர்கள், டால்டாவில் பொரித்தெடுக்கலாம்.

''வெண்மதி''

மாதர்களின் சிறந்த மாதப் பத்திரிகை

சந்தா விபரம்

1 வருஷத்திற்கு	ரூ	5—0—0
6 மாதத்திற்கு	ரூ	2—8—0
தனிப்பிரதி	ரூ	0—6—0

மானேஜர்:—"வெண்மதி"

153, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட், சென்னை.

வெளி நாடுகளுக்கு

வருஷத்திற்கு	ரூ	6—0—0

தக்ஷிண ரயில்வே கால அட்டவணை

சென்ட்ரல்

புறப்பாடு

கல்கத்தா மெயில்	இர.	8-00
கிராண்டிரங்க் எக்ஸ்	கா.	9-15
பெஜவாடா பாஸஞ்	கா.	7-05
பூரி பாஸஞ்	இர.	7-05
விசாகபட்டினம் பாசஞ்சர்	இர.	11-30
பம்பாய் மெயில்	இர.	9-00
பம்பாய் எக்ஸ்	கா.	7-30
ரெய்ச்சூர் பாசஞ்	கா.	9-05
ரேணிகுண்டா பா.	பா.	5-25
அரக்கோணம் பா.	கா.	7-45
,,	மா.	1-43
,,	இர.	6-40
பெங்களூர் மெயில்	இர.	8-45
பெங்களூர் எக்ஸ்	மத்.	12-30
பெங்களூர் பாசஞ்	கா.	6-10
பெங்களூர் பாசஞ்	இர.	9-05
ஜோலார்பேட்டை பாசஞ்சர்	கா.	11-20
கொச்சின் எக்ஸ்	மா.	6-10
மங்களூர் எக்ஸ்	இர.	7-50
நீலகிரி எக்ஸ்	இர.	8-15
சென்னை-பம்பாய் ஜனதா எக்ஸ் பிரதி செவ்வாய், சனி	மத்	1-50
மதருஸ்-பெஜவாட ஜனதா எக்ஸ் பிரஸ் (டெல்லிக்கு பிரதி செவ்வாய் வியாழன் சனி)	மத்.	12-50

வருகை

கல்கத்தா மெயில்	கா.	7-20
கிராண்டிரங்க் எக்ஸ்	மா.	5-35
பெஜவாடா பாஸஞ்	இர.	8-40
பூரி பாசஞ்சர்	கா.	9-00
விசாகப்பட்டிணம் பாசஞ்சர்	கா.	4-40
பம்பாய் மெயில்	கா.	5-50
பம்பாய் எக்ஸ்	இர.	7-00
ரெய்ச்சூர் பாஸஞ்	மா.	3-10
ரேணிகுண்டா பாசஞ்சர்	கா.	9-46
,,	இர.	9-10
அரக்கோணம் பாசஞ்சர்	இர.	7-46
,,	மா.	4-29
பெங்களூர் மெயில்	கா.	6-15
பெங்களூர் எக்ஸ்.	மத்.	3-00
பெங்களூர் பாஸஞ்.	கா.	5-00
பெங்களூர் பாஸஞ்.	இர.	8-20
ஜோலார்பேட்டை பாஸஞ்சர்	மத்.	1-25
கொச்சின் எக்ஸ்.	கா.	8-20
மங்களூர் எக்ஸ்.	கா	7-10
நீலகிரி எக்ஸ்பிரஸ்	கா.	6-35
பம்பாய்—சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் பிரதி திங், வியா	மத்.	3-20
மதருஸ்—பெஜவாடா ஜனதா எக்ஸ்பிரஸ் (பிரதி ஞாயிறு செவ்வாய் வியாழன், டில்லியிருந்து புறப்)	மா.	5-10

எழும்பூர்

மெயின் லைன் — புறப்பாடு

செங்கோட்டை பாஸஞ்	கா.	8-05
இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்	இர.	8-00
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	இர.	8-40
விருதுநகர் பாஸஞ்.	இர.	10 05
கடலூர் பாஸஞ்.	மா.	3-45

கார்டு லைன்

தனுஷ்கோடி பாஸஞ்.	கா.	10-40
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	இர.	8-25
திருநெல்வேலி எக்ஸ்	இர.	7-30
தூத்துக்குடி எக்ஸ்	இர.	9-40

பீச்
காஞ்சிபுரம்
பாஸஞ்சர். மா. 5-35
மா. 6-01
கா. 6-45

மெயின் லைன் வருகை

செங்கோட்டை
பாசஞ்சா இர. 7-05
இந்தோ-ஸிலோன்
எக்ஸ்பிரஸ் கா. 7-20
திருவநந்தபுரம் பாசஞ் கா. 5-25
விருதுநகர் பாசஞ் கா. 5-05

கடலூர் பாசஞ் கா. 11-30

கார்டு லைன்
தனுஷ்கோடி பாசஞ் மத். 3-15
திருவனந்தபுரம்
எக்ஸ்பிரஸ் கா. 6-05
திருநெல்வேலி
எக்ஸ்பிரஸ் கா. 6-55
தூத்துக்குடி எக்ஸ் கா. 5-45

பீச்
காஞ்சிபுரம் பாசஞ் கா. 9-56
, கா. 9-26
மா. 8-20

Venmathi

ADVERTISEMENT TARIFF

	Casual	Contract
Wrapper II Page	Rs. 150	Rs. 125
,, III Page	,, 125	,, 105
Last Cover	,, 200	,, 175
Inside Full Page	,, 75	,, 70
,, Half Page	,, 40	,, 35
Quarter Page	,, 25	,, 20

Advertisements will not be allowed in the Matter

Special position 20 percent extra. Advertisement in 2 colours for all positions 50 percent extra.

குழந்தையின் உணவு

குழந்தைக்கு தாய் பாலே விடச் சிறந்த ஆகாரம் கிடையாது. பசும் பால் எவ்வளவு தான் பக்குவப் பட்டிருந்த போதிலும் குழந்தையின் தேவைக்காக ஏறக் குறைய 9மாத காலமாக ஆயத்தப் படுத்தப் பட்ட தாய்ப்பாலுக்கு ஈடாகாது. குழந்தைகளைக் காப்பாற்றுவதில் தகப்பனுக்கும் அக்கரையிருக்க வேண்டும். இவர்கள் குழந்தையின் எடையை அடிக்கடிக் கவனித்து வரவேண்டும்

பிறந்த குழந்தை பால் சாப்பிடக் கூடிய உருவில் தாயின் மூலைக் காம்புகள் இருக்க வேண்டும். விசேஷ மாக முதல் கர்ப்பிணிகள் பிரசவ காலம் கிட்டிய சமயத்தில் குழந்தை சுலபமாகப் பால் குடிக்க வசதியாக இருக்கும்படி மூலைக்காம்புகளை சுத்தி செய்து எண்ணெயினால் தடவி உருவாக்க வேண்டும். குழந்தை பால் குடிக்கையில் உதடுகளால் மாத்திரமல்லாமல் வாயாலும் பால் சுரக்கும் பாகத்தை நன்றாகக் கவ்வி, சப்பி உறிஞ்சப் பழக்குவிக்க வேண்டும். அனாவசியமாக, அதிக நேரம் ஊட்டினால் குழந்தை களைப்புறும்; தாய்க்கும் சிரமந்தான். முதல் 10–15 நிமிஷம் ஊட்டினால் போதும். தாயார் இளைப்பாற வேண்டும். காற்றோட்டமான இடத்தில் தேகாப்பியாசமும் செய்ய வேண்டும். ஒரு மாதத்துக்கு வீட்டு வேலை செய்யக் கூடாது. பகலில் இரண்டு மணி நேரம் தூங்க வேணடும். குழந்தைக்கு மணிக் கணக்குப்படி பால் கொடுத்தால் தாய்க்கும் சிரம மிராது. குழந்தையும் ஆகாரத்தை சரிப்படுத்திக் கொள்ளும்.

தாயானவள் பால் சுரப்பதை உத்தேசித்து நினைத்த போது குழந்தையை ஊட்டும்படி செய்யக் கூடாது. சிலருக்கு பால் கொஞ்சமாக யிருந்தும் முலைகள் கடினமாகவும் அதிகப்பால் உள்ளனவாகவும் தோன்றும். சூடான எண்ணெயைக்கைகளில் தடவி மெதுவாகச் கசக்கி, கொஞ்சம் பாலைப் பீச்சி விட்டு குழந்தை தன் வாயால் கவ்விச் சாப்பிடும்படி பொருமையாக முயன்றால், பால் நன்ருகச் சுரக்கும். பால் கொடுக்கும் போது தாய் முதுகுப்புறம் நன்ருய்ச் சாய்ந்து கொண்டு ஒரு கையால் குழந்தைக்கு தகுந்த வாறு முலையைக் கொடுக்க வேண்டும். குழந்தையின் முகம் மார்பில் புதைத்து விடக் கூடாது. பால் ஊட்டினதும் குழந்தையை மார்பில் சார்த்தி லேசாக வயிறு அமுங்கு மாறு சில நிமிஷங்கள் தாங்கிக் கொண்டால் அதிகப்படியான பால் உட்கொண்ட வாய்வு முதலியவை ஏப்பத்துடன் வாயாலாவது வாயுவாலாவது கழிந்து விடலாம்.

தாய்ப் பால் கிடைக்காத குழந்தைக்கு பாலைப்போல குணமுள்ளதுமான பால் கழுதைப் பால். கழுதைப் பால் கிடைக்காவிட்டால் பசுவின் பாலைக் கொடுக்கலாம்,

"அம்மா இஷ்டப்படி"

களம்- 2.

[சோமசுந்தரம் வீட்டு சமையலறை. சிறு பெண் குழந்தைகளும், பிள்ளைக் குழந்தைகளுமாக சண்டையிட்டு, அழுது கூக்குரலிடுகின்றன. வெளியே, அரவிந்தா, ஹார்மோனிய சுருதியுடன் பாடும் சப்தமும் கேட்கிறது. விஜயா, குழந்தைகளை அதட்டித் திட்டி யடித்த வண்ணம். சோமசுந்தரம் வருகிறான்.]

பையன் :—அம்மா! அம்மா! அங்கச்சி, சர்க்கரை பாட்டிலை ஒடச்சுட்டா, அம்மா. (அங்கச்சியை அடிக்க, அது அழுகிறது)

அங்கச்சி :—(பையனை ஓடியடித்து) கிண்டுதாம்மா, பாட்டிலைப் பிடுங்கிக் கீழே போட்டான். நான் ஒடக்கல்லேம்மா.

விஜயா :—(பசங்களை அடித்துத் திட்டி) சனியன்களா-- பீடைகளா! சமயலறையிலேயேதானு, எப்பப் பார்த்தாலும், பெருச்சாளிகள் மாதிரி, வட்டமிட்டிண்டு தொலையணும். தொலையுங்களேன் எங்கேயாவது, கண் காணுதே. புண்டந்தான் கொட்டிண்டாச்சே

சோம:—அடா! டா! டா. வீடா இது? என்ன அமக்களம்! என்ன ரகளை. சே-சே-சே-சே,

விஜயா :—இதுகள் போராதுன்னு, நீங்களும் வந்துட்டிகளா. காப்பிக்குத்தானே வந்திகள்? கொஞ்சம், கூடத்திலேபோய், உட்காருங்கோ. அஞ்சும் மூணும் அழகாப் பொறந்திருக்கே. அதுகளையும் அழச்சுண்டு போங்கே . அல்லாட்டா, ஒரு காரியமும் ஆகாது எனக்கு.

சோம :—மணியோ ஆயிடுத்து. அவாள்ளாம் வர நேரமாயிண்டிருக்கு. அரவிந்தா - எங்கே? அக்கா, இன்னமும் வரல்லியோ? எங்கே தொலைஞ்சு போயிட்டா.

விஜயா :—உங்க அக்கா, எங்கேயும் தொலைந்து போயிடல்லே. ஜாக்ரதையா, கோவிலுக்குத்தான் போயிருக்கா, புராணங்கேட்க. காப்பி டயம் தெரியும். இதோவந்துடுவா, கவலைப்படாதிங்கோ. உங்களுக்கு அக்காவுக்குந்தான், வீட்டு விசாரமென்பதே கிடையாது. வேளைதவருமே, காப்பிக்கும், சோத்துக்கும் வந்துட்டு, வீட்டை விட்டுப் போயிட்றிகள். என் தலையிலெழுத்து, இன்னமும் எத்தனை நாள்தான் இந்த வீட்டிலே, இந்த மாதிரி, சோத்தைப் பொங்கிப் போட்டுண்டு, உழைக்கணுமின்னு விதிச்சிருக்கோ! உம். யாரைச்சொல்லி என்ன பிரயோஜனம். காயற வெயிலுக்கும் தீயற அடுப்புக்கும் நடுவே: இந்த அழகான பசங்களைக் கட்டிண்டு அவதிப்பட்ற இந்தத் தொல்லையெல்லாம் ஒழிஞ்சு, ஒருநாளாவது, இந்த வீட்டிலே, அம்மாடீன்னு நிச்சிந்தையா இருந்துட்டு எப்போ சாகப்போறேமோன்னு தானிருக்கு, எனக்கு.

சோம:—சரி. புராணம் ஆரம்பிச்சுட்டியா! எனக்குக் கூடத் தான், ஒரு நாளாவது, உன் வாயிலே அரைபடாத, மூக்காலே அழுத முணுமுணுப்பதைக் கேளாதே, அப்பாடான்னு நிம்மதியா யிருந்துட்டுச் சாகப் பேறுமின்னுதானிருக்கு.

விஜயா:— எனக்கும் நிச்சந்தை வரப்போறதில்லே, உங்களுக்கும் நிம்மதி ஏற்படப் போறதில்லே இந்த ஜன்மத்திலே.

சோம:— ஆகவே, நாம்பள் ரெண்டு பேரும் சாகப்போறது மில்லே,

விஜயா:— சாகாமே, என்னுஞ் சிரஞ்சீவியா, இப்படியே, விசாரப் பட்டுண்டே வாழுண மின்னுதான், உங்களுக்கு ஆசையா யிருக்காப்போலிருக்கு.

சோம— ஏண்டி--. நாம்பள் விசாரப் பட்றதாலே என்னடி ஆயி டப் போறது? எதற்கும், அதிருஷ்டம் வேணுமடீ அதிருஷ்டம் இருக்கணும், ஏற்ற வேளேயும், சமயமும் கூடணும்.

விஜயா:— அதென்ன அதிருஷ்டமோ, வேளேயோ, எங்கேருந்து வரப்போறதோ, எப்போதான் வரப்போறதோ, வரப்போறதுன்னு சொல்லிண்டே காலந்தள்ளிண்டிருங்கோ, அதுக்குள்ளே, பர லோகப் பிராப்திதான் வந்துடப்போறது.

சோம:— பைத்யமே--. மனுஷ்ய வாழ்க்கையே, "ஹோப் பார் தி பெஸ்ட்" நல்லது வரப்போறதுன்னு நம்பிண்டே யிருப்பது தானே வாழ்க்கை. அந்த நம்பிக்கை போயிடுத்தானு, வாழ்க்கை யும், அவுட்-தான். சரிசரி இன்னிக்கூன்னு, காப்பி போட, ஏன் இவ்வளவு தாமசம்!

விஜயா:— காப்பிப்பொடி காலேயோட ஆயிடுத்து. ரங்கனேப் போய் வாயிண்டு வாடான்னு, நாழியாயிடுத்துன்னு போயிட் டான். அடுத்தாத்து மாமியைக் கேட்டுக் கடன் வாயிண்டு வரப் போயிருந்தேன்.

சோம:—காப்பிப்பொடி காலேயோட ஆயிடுத்தா? ஏண்டி போன சனிக்கிழமை தானே அரை வீசை வாயிண்டு வந்தேன். ஒரு வாரங்கூட முடியல்லே, அதுக்குள்ளேயா ஆயிடுத்து?

விஜயா:—ஆயிடுத்துன்னு, என்னே யென்ன பண்ணச் சொல் றீகள்? நம்ம சம்சாரமென்ன, நீயும் நானுமடீ, எதிரும் புதிரும டீன்னு இருக்காப்போலேன்னு, பேசறீகள்; அஞ்சு பிள்ளேயுப, நாலு பொண்ணுமாச்சு; நீங்களும், நானும் அக்கா ஒண்ணு ஆக, ஒரு டஜன் வாய்கள், தினந்தினம், இரண்டு வேளே காப்பி குடிக்கறது. தெரியுமோனே? சில நாளில், உங்களுக்கு, ராத்திரி யிலே வேறே தவிர, வரவா, போ ர வா. இந்த வாரம், நல்ல வேளேயா, வரவா போரவாள் இல்லாமே இருந்ததோ, ஒரு வார

மாவது வந்தது. வீட்டிலே என்ன, என்ன செலவாரது, எவ்வள செலவாரதுன்னு உங்களுக்கு தெரிஞ்சான்னு? அக்கா சொல்றப் போலே, சம்சாரம் என்னமாத்தான் நடக்கறதுன்னு எல்லோருக்கும் ஆச்சர்யமாத்தானிருக்கு.

சோம:— நெற்றி வேர்வை, தரையிலே விழ, ஒர்த்தன் ராப்பகலா உழைத்து சம்பாதித்துக் கொண்டு வந்து, கொட்டிண்டேயிருந்தால், உட்கார்ந்து சாப்ட்றவாளுக்கு, ஆச்சர்யமாயிராதோ. நீங்கள் தான் சம்பாகிச்சுக் கொண்டுவந்து கொட்டி சம்சாரம் நடத்துகிறீர்களாக்கம்? சே-சே —சே-சே எப்போப் பாத்தாலும் அழுகைதானு. இந்த வீட்டிலே. ஒரு காசுக்குக் கதி கெட்டவன்கள் குடும்பமெல்லாம், எவ்வளவு கோப்யமா, திருப்தியா, சந்தோஷமா, நடக்கறது--. நம்ம தலையெழுத்து, முன்னுக்கு முன்னுக வாங்கிப் போட்டுண்டே வரச்சேயும், வீட்டுக்குள் நுழையச்சேயே இது இல்லே, அது இல்லே-இல்லே—இல்லேன்னு அழுகைதான், எப்போப் பார்த்தாலும்—.

விஜயா:- ரொம்ப நன்னயிருக்கு, உங்க வார்த்தை காப்பிப் பொடி இல்லேன்னு, அதுக்காக, என் மேலே எரிஞ்சு விழுந்து எதுக்காக இப்படி வள்வள்னு விழறிகள்? காப்பிக் கொட்டையையெல்லாம் நானு கடிச்சுத் தின்னுட்டேன்? வீட்டிலே சாமான் இல்லேன்னு, இல்லேன்னு சொல்லாதே என்னுன்னு சொல்றதாம். அடயப்பா இனிமேல் நான் வாயைத்திறக்கறதேயில்லே நீங்களே எல்லாத்தையும் பாத்துக்குங்கோ. வீட்டிலே, எதாவது இருந்தால் சமச்சுப் போட்றேன், கூலிக்காரியாட்டமா ஒண்ணுமில்லாட்டா, ஈரத்துணியை மடிச்சுப் போட்டுண்டு, ஒரு மூலையிலே படுத்துண்டுகடக்கிறேன், வாயெக்கையைத் திரவாதே இல்லாட்டா, மஞ்சநீர் கரச்சு வெச்சுண்டு, நீங்கள் வீட்டுக்குள்ளே நுழைச்சே, ஆலத்தி சுற்றிக் கொட்டி, குதிச்சுப் பாட்றேன்.

சோமசு:—வாயெத் திறக்கறத்துக் குள்ளே, எண்டீ, இப்படி, பிலுபிலுனு பிடிச்சுண்டு, தொம் தொம்னு குதிக்க ஆரம்பிச்சுட்றே காப்பிக் கொட்டை ஆயிடுத்தான்னு நான் கேட்டதா தப்பாப்போச்சு? அது இல்லே இது இல்லேன்னு சொல்றத்துக் குப்பதிலாக அது வேணும், இது வேணும்னு சொல்லக் கூடாதான்னுதான் சொல்ல வந்தேன். போகட்டும் அப்படீன்னு, நம்ம சம்சாரத்துக்கு, மாசம் மூணுவீசை காப்பிக் கொட்டையா ஆரதான்னு சொல்றே?

விஜயா:—மூணுவீசையோட விட்டாப் போதாதா.

சோம:—ஹூம் அப்போ காப்பிக்கூன்னு மட்டும் நம்ம, வீட்டிலே மாசம் மூணு வீசை கொட்டை மூவாறு, பதினெட்டு ரூபாயாரது. சக்கரை எவ்வளவாரது? ஆறு வீசையா?

விஜயா:—தாராளமா எட்டு வீசை. வாரத்துக்கு ரெண்டு வீசை போறும் போருதான்னு போயிட்றது, ஞாபகம் வெச்சுக்குங்கோ.

சோம:--காப்பிக் கொட்டை, பதினெட்டு ரூபாய் சக்கைரை, எட்டோணெட்டு, எண்கால் ரெண்டு பத்து ரூபாய் ஆகமொத்தம் இருபத்தெட்டு, முப்பது ரூபாயா ஆறதுங்கறே.

விஜயா:--பால்பணம், கணக்கிலே வரவேண்டாமா? காப்பிக்கூன்னு, தினம், காலேயும், மத்யானமும், அரைபடி பசும்பாலும், அரைப்படி எருமைப் பாலும் வாங்கறது, ஞாபகம் வெச்சுக்குங்கோ. முப்பது படிக்கு, நாற்பத்தஞ்சு ரூபாயிலே ஏழரைபோனு கிட்டத்தட்ட நாற்பது ரூபாயாரது, இது வேறே.

சோம:–ஆகமொத்தம் காப்பிக்கடைக்கூன்னே முப்பதும் நாற்பதுமா, எழுபது ரூபாயா ஆகதுங்கறே அடிப்பாவி! இந்த எழுபது ரூபாயிலே, ஒரு குடும்பம், நன்னுச் சாப்பிட்டுச் சுகமா வாழலாமே!

விஜயா:---எழுபதுதான் மீதி யாரு கொடுப்பா? கும்மட்டிக்குக்கரி மாசம் நாலுரூபா, நான் வேணுமின்னு கூலியில்லாத வேலேக்காரி, இந்த வீட்டுக்கு சமயல் காரன் வெச்சுண்டா...

சோம:—சரி சரி சமயல் காரன்தான் பாக்கி வாயைமூடிக்க்கோ போதும், இனிமேல் பார், இந்த வீட்டிலே, இந்தக் காப்பி கடையைக் கட்டி வெச்சுடணும், தெரிஞ்சுதா? நம்ம பெரியவாள் சொல்றது போல, பழையது சாப்பிட்டாலும், இத்தனே பணமும் மீறுவதோடே, பசங்கள் உடம்பும் உறுப்படும், வைத்யச் சிலவுங்கூடக் குறைவுபடும்: நமக்கு சம்பாத்யமிருக்கோ இல்லேயோ, கடன் வாங்கியாவது காப்பியைக் குடிச்சுட்டு, மாதம் தவருதே டாக்டர்பில் ஆறேழுரூபாயின்னுதொலேக்க வேண்டியிருக்கு.

விஜயா:---காப்பி சாப்பிட்றதுனுலே டாக்டர் பில் ஏறிட்றதுன்னு சொல்லவாண்டாம். இத்தனே நாளா, ரேஷனரசி தின்னு, தின்னு வயிறும் உடம்பும் கெட்டுக் கிடைக்சது இப்போ என்னென்னவோ அரிசியெல்லாம், என்னென்னவோ விலேக்கு விக்கரதுலே எதெது நல்லதுன்னு தெரியாதே வாங்கிண்டு திண்டாட்றேமே, இதெல்லாந்தான் வைத்யன் பில் ஏறிண்டு வரத்துக்குக் காரணமாகும், அரிசிவிற்கற விலேயிலே, பழையதுக்கு வேறே வடிச்சு வெச்சா, அது மட்டும் காசாகாதா காப்பியெப் போலே?

சோம:—காப்பி சிலவாராப்போலே பழையதுக்கும் ஆயிடுமோ? காப்பியினுலே டாக்டர் பில் ஏறல்லியாம் அரிகிக்கோளாறு தாம் காரணமாம் சொல்ல வந்துட்டாள்; சாதம் வடிக்கிற கஞ்சியை வைச்சுண்டு, அதிலே மோரையோ, பாலேயோ, இஷ்டபடி விட்டுண்டு சாப்பிட்டா, உடம்புக்கு, வலுவும், திடமும் ஏற்படும். வீணுகக் கீழேகொட்டற இந்தக் கஞ்சியிலும், கழி நீரிலுந்தானே வைட்டமின் சத்துக்கள் இருக்கூன்னும், நம்ம தேகத்திற்குப் பிரயோஜனப்படாதே வீணுக்கப் பட்றதுன்னும், பிரபல உணவு ஆராய்ச்சி யாளர் களெல்லாம் சொல்ரு.

விஜயா:—அந்த உணவு ஆராய்ச்சி யாளர்களெல்லாம், அவா ளவாள் வீட்டிலே; கொதிகஞ்சியும், கழிநீருந்தான் குடிக்கிருர் களாமோ? அவங்கள் உடம் பெல்லாம், ஒட்டியுலர்ந்து, கொத் தாங்காவத்தல் மாதிரி கிடக்கிறதே, தினந்தினம் வைத்யன்கள் வீட்டோடேயே பழியாக் கிடக்கிருன்களே சம்சாரத்தோடே என்?

சோம:—சட் வாயை மூடு உள்ளதை சொன்ன, உடம்பெரிச் சல் தாணுங்கறது. உன்கிட்டே சரியத்தான் போச்சு.

விஜயா:—எனக்கொன்னும் உடம் பெரிச்சல் வரல்லே அந்த ஆராய்ச்சிக்காரனெல்லாம் கஞ்சியும், கழிநீரும் குடுச்சு, மத மதன்னு கிடக்கறத்துக் கென்னென்னு தான் கேழ்க்கறேன். ஊருக்கு உபந்யாசம் பண்றத்திலே எல்லாருந்தான் சாமர்த்திய மாப் பேசுவாள்தான். சொல்றதைத் தானே அனுஷ்டித்துக் காட்டினலல்லவா, உலகம் நம்பும்.

சோம:—இந்தா இந்த வீண்குதர்க்கப் பேச்செல்லாம் பேசிண் டிருக்காதே காரியத்தெப்பாரு.

விஜயா:—காரியம் பார்க்காதே கட்டில்லே படுக்கத் தான் வெச்சிருக்கி களாக்கம். கஞ்சியிலும், கழிநீரிலுந்தான்வைடமின் நிரைய இருக்கூன்ன, இனிமேல், நீங்கள் நடத்தர சம்சாரத் திலே கஞ்சியும், கழிநீரும் குடிச்சுட்டு, வைக்கோல் தான் தின் னுண்டு கடக்கணும். ரெண்டுபானே வாயிண்டு வாருங்கோ ஒவ்வோர் வீட்டுக் காப்போய், கஞ்சியும் கழிநீரும் கொட்டச் சொல்லி வாயிண்டுவரேன் நானேயே பிடிச்சு.

சோம:—சும்மா வெட்டிப் பேச்சு பேசி, என் ஆத்திரத்தைக் கிளப்பினியோ, ஜாக்ரதை. நான், ஒன்றைக் கண்டிப்பாச் சொன்னேன்ன. சொன்னது தான். கண்டிப்பு தான் இந்த நிமஷம் முதல், நான் காப்பி சாப்பிடறதை நிறுத்தி விட் டேன் இப்போ என்ன சொல்றே உபந்யாஸம் அனுஷ்டானம் ரெண்டும் கலந்து தோல்வியோ.

விஜயா:—போதுமே உங்கள் சமத்தும் சாதுர்யமும்: நீங்கள் நிறுத்திட்டா மட்டும், எல்லாம் ஆயிடுத்தா? காலேயிலே பால்காரி வரத்துக்குப் பத்துநிமிஷம் காழியாயிட்டா உங்க அக்காவைப் பார்க்கணுமே. தலையைப் பிடிச்சிண்டு, வயிற்றைப் பிசஞ்சுண்டு, வாசலுக்கும் சமையலறைக்குமா, அப்பாடா அம்மாடன்னு, புலி உலாத்தறப்போலே, ஓடி ஓடி உலாத்தாத்தே. இப்படியிருக்கச்சே நீங்களே சொல்லுங்கோ, அக்காவாலே காப்பியை விட்டுட முடியுமா? விட்டுடுன்னு, நீங்கதான் சொல்லலாமா?--.

சோம:—அக்காவானு. என்ன? யாரானல் என்ன? சம்சாரம் முன்னுக்கு வரணுமின்ன. நாமெல்லாருமாக, ஒரே கட்டுப்பாடாக நடந்துண்டால்தான் முடியும்.

விஜயா :—அக்கா காதிலே படும்படியா, இப்படிக்கேதாவது ஊளறி வைக்காதேயுங்கோ போதும், எதெதுக்கோ என் மண்டையைப்போட்டு உருட்டறது போதாதே இதுக்குவேறே, ஊரெல்லாம் என்னைத்தூத்திண்டு போயிடுவாள், நான்தான் உங்களுக்கு ஓதி, அவாள் காப்பிவாயிலே மண்ணைப் போட்டேன்னு.

சோம :—உன்னை எதுக்கடீ அவள் தூத்தறது? இந்த வீட்டிலே, என் வார்த்தைக்கு' மதிப்பு, மரியாதை என்பதே கிடையாதோ? நீ என்ன, எனக்குச் சொல்லிக் கொடுக்க கிடக்கு? என் சம்சாரப்பொறுப்பு, எனக்கில்லையோ? அக்கா வரட்டும். நானே, நேரே இப்பவே சொல்றேன் அவளோடே.

விஜயா:— அட கிரகசாரமே! நீங்கள் அக்காகிட்டேயும் சொல்லவேண்டாம். ஆட்டுக்குட்டி கிட்டேயும் சொல்லவேண்டாம். இந்தாருங்கோ காப்பி. சிவனேன்னு காப்பியைக் குடிச்சுட்டு, கூடத்திலேபோய் உட்காருங்கோ. அவாள்வர நேரமாயிடுத்து.

சோம:—(கோபத்துடன்) காப்பியைக் கொண்டுபோய்ச் சாக்கடையில் கொட்டு இதென்ன, பொம்மனாட்டி ராஜ்யமின்னு நினைச்சுண்டிட்டியோ, உன் மனசுக்குள்ளே? என்னை அடக்கி ஆளரையோ நீ? இதென்ன, வீடா? சத்திரமா? தலைக்குத்தலை பெரியதனமாப்போச்சே. எதுடா, வீட்டுக்குப்பொறுப்பாளியா ஒரு புருஷன் இருக்கானே, அவனுக்கில்லையா குடும்பக்கவலையின்னு நெனச்சுண்டு, ஏதோ இருக்கறத்தை வெச்சுண்டு, செறவி, சிக்கனமா, சந்தோஷமா, சம்சாரம் பண்றதை விட்டாள்: என்னை அடக்கி ஆள வந்துட்டாள். சே சேதிருப்தியும், சந்தோஷமும், இல்லாத வீட்டிலே, லஷ்மி, எங்கிருந்து வருவாள்? அடக்கியாள வந்துட்டா என்னை, அடக்கியாள.

விஜயா:— உங்களை ஒருத்தரும் அடக்கியாளப்பார்க்கல்லே சமையலறையிலே நின்னுண்டு கத்தவாண்டாம். அக்கா வந்தால்-.

சோம:— (கோபம் பொங்கி) அக்கா வந்தால் என்னடீ? என்ன பண்ணிடுவள் அக்கா? அவள் வரவரைக்கும் இங்கேயே இருக்கத்தான் போகிறேன். என்ன பண்ணிட்றுள் பார்ப்போம். அதையுந்தான் அவளோடேயே, நானேதான் சொல்லப்போகிறேன். வீட்டுப் புருஷன் வார்த்தைக்கு ஒரு மதிப்பும், மரியாதையும் இல்லேன்னு அந்த வீட்டிலே இருந்து, என்ன பிரயோஜனம்? என்ன கௌரவம்?

விஜயா :—இப்போ, நானென்ன உங்கள் வார்த்தையை மதிக்காமல், தலைவிரிச்சாடிண்டு கிடக்கிறேன்? ஏதோ. வீட்டு விசாரத்தைச் சொல்ல வாயெடுத்ததுக்கா இவ்வளவு அமக்களம்! அக்கம் பக்கத்தார் கேட்டா சிரிக்கப்போறு,

சோம :—அக்கம் பக்கத்தார் சிரிப்பாளா? எதுக்கடீ சிரிக்கறது? யாரைப்பார்த்தடீ அவாள் சிரிக்கிறது? எங்கே--. என் எதிரே

வந்து சிரிக்கச் சொல்லு, அவாளுக்குத் தைர்யமிருந்தால் முப்பத்தி ரெண்டு பல்லையுந் தட்டி, அறுபத்திநாலு துண்டாக்கி, அப்படியே கையில் கொடுத்து போகச் சொல்ல மாட்டேனே? சிரிப்பாளாம் அவாள், சொல்ல வந்துட்டாளாம் இவள். நம்ம சம்சாரத்தைப் பத்தி நான் பேசிண்டா, அக்கம் பக்கத்தார் எதுக்கடி சிரிக்கிறது? அவாள் சம்சாரமெல்லாம் ரொம்ப ஒழுங்காயிருக்கோ? மேலாத்துக் காரனைப்போல, அப்பனும் பிள்ளையுமா அடிச்சுப் புறண்டுண்டு, கழுத்தைப் புடிச்சுண்டு, தெருச் சிரிக்க இருக்கேனே நான்? இல்லே, கீழாத்திலே போலே, போது விடிஞ்சா, போதுபோனா, மார்வாடிக் காரனும், பட்டாணித் துலுக்கனுமா, நம்ம வீட்டு வாசல்லே வந்து, கன்னா பின்னான்னு கத்திண்டு, பழிகிடக்கிறான்களா, கடன் தண்டிண்டு போக? சிரிப்பாளாம் அவாள், சொல்ல வந்துட்டாளாம் இவள்! அவாளவாள் பவிஷுதான் ஊர் சிரிக்கிறதே. என்னைப் பார்த்து, இவாளெதுக்கடி சிரிக்கிறது? என் கௌரவத்திலே, லக்ஷத்திலே ஒரு பங்குகூட, உங்கப்பன், பாட்டன் எவனுக்காவது இருக்குமா? அவாளவாள் வண்டவாளமெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நெனச்சுட்டியோ? ஊர் சிரிக்குமாம், இவள் அடக்க வந்துட்டாளாம் என்னை. ஊரார் சிரிக்க, என்னடி சொல்லிட்டேன் இப்போ.

விஜயா:— சிவனேன்னு போய்ச் சேர்ந்தவாளை யெல்லாம் எதுக்குப் பிடிச்சிழுத்து, வலுச்சண்டைக் கிழுக்கிறீகள் எதையோ சொன்னால், எதையோ நெனச்சிண்டு, எதுக்காக இப்படித் தொண்டைத்தண்ணி வத்த கத்திறீகள், அர்த்தம் வியாக்யான மில்லாமே—. காப்பியைக் குடிச்சுட்டு, மூஞ்சியை அலம்பிண்டு வாங்கோ—. அவாள் வா நேரமாச்சுபொண்ணைப் பார்க்க வந்தவா, உங்களைப் பார்த்துப் பயந்துண்டு, அப்படியே போயிடப் போறா.

சோம:—. ஹெ—ஹெ—. ரொம்ப சாதுர்யமா பேசிட்டதாக மனசிலே எண்ணமோ இப்போ? இன்னிக்கி, நான், காப்பி. சாப்பிடப் போறதில்லேன்னா, காப்பி சாப்பிடப் போறதில்லை தான்.

விஜயா:— அடியம்மா! காப்பி டயம் கால்மணி கழிச்சத்துக்கு, எவ்வளவு அமர்க்களமடியம்மா—. இப்பேர்ப் பட்டவாள் தான், இனிமேலே காப்பிக் குடியை அடியோடு நிறுத்திட்றவாளாம்.

சோம:—. இதோ பார்,—. தொண தொணன்னு, எதையாவது உளறிண்டே என் கோபத்தைக் கிளப்பாதே, தெரியுமா? நான் சொல்றதைக் கேட்கப் போறியா இல்லியா?

விஜயா:— நான் சொல்றதைத்தான் நீங்கள் கேட்கக் கூடாதுன்னு, அதென்ன அவ்வளவு பிடிவாத மென்கிறேன்? நானென்ன, மனுஷியல்லவா? மதிப்பில்லாதவளா இந்த வீட்டில்?

உங்களுக்குச் சத்ருவா? விஷத்தையா சாப்பிடச் சொல்றேன் உங்களை? நாற்பது வருஷத்துக் காப்பிப் பழக்கத்தை, நாலு நிமிஷ கோபத்திலே நிறுத்தி, வாழ்ந்தாப்போலத்தான்--. நிறுத்தினாத்தான் உடம்புக்காகுமோ? முதல்லே, இந்தக் காப்பி ஆறிப் போறதுக்குள்ளே குடியுங்கோ, சொல்றேன். அப்போதான், குழம்பிப்போன மூளை, சரியா வேலை செய்ய ஆரம்பிக்கும்—.

சோம:— அடா-டா-டா-டா—. காபிக்குடி, நிறுத்தியாச்சுன்னு, நிறுத்தியாச்சுதான்--- தெரிஞ்சுக்கோ--.

விஜயா:—. எல்லாம், நாளை முதலோ, வர்ற முதல்தேதி முதலோ, காப்பிக்குடி நிறுத்தம் அமுலுக்குக் கொண்டுவர யோசிக்கலாம். அவாள்வா நேரமாச்சு. இப்போ இதைக்குடிச்சுட்டு முகத்தைக்கழுவிண்டு வாங்கோ, போங்கோ--. ஒரு பிடியா, திடீரென்னு காப்பிப் பழக்கத்தை நிறுத்தத்தான் முடியுமோ, உங்களாலே?

சோம:— ஏன் முடியாது? சென்னை காங்கிரஸ் அரசாங்கம், மதுவிலக்குத் திட்டத்தை, மாகாணம் முழுதும் திடீர்னுதானே அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். ஆயுசு பர்யந்தமா குடியிலேயே மூழ்கி வாழ்ந்துண்டிருந்தவன்களெல்லாம், இப்போ செத்தா போய்ட்டான்கள்?

விஜயா:-- குடிப்பழக்கம், ஊர்லே, எங்கே பூரணமாகவும் ஒழிஞ்சுது? எத்தனை கேஸுகள், எத்தனை பிராஸிக்யூஷன்கள். தெரியாமே, குடிச்சுண்டிருக்கறவா எத்தனை பேர்--. அவசியம் குடித்தாக வேண்டுமென்று, மது விலக்குத் திட்டத்தினின்றும் விடுதலைப்பட்டுள்ளவர்கள் எத்தனைபேர். மருந்துக்குக் குடிக்கிறவா, வைத்தியத்துக்குக் குடிக்கிறவாள், கண்டத்தையெல்லாம் காய்ச்சிக் கள்ளுச் சாராயமாக்கித் திருட்டுத்தனமாகக் குடிக்க, சேரி தேடிப் போறவாள் எத்தனைபேர். நீங்கள் காபிப்ரொஹிபிஷன் செய்யப் பார்த்தால், இந்தக் கதிதான் வரும். எதையும், மெள்ள மெள்ள யோசிச்சு, குடும்பத்தாரெல்லாரோடும் கூடிக்கலந்து யோசனை செய்த பின்னரல்லவா, ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும்.

சோம:- உங்களையெல்லாம் சபைகூட்டி, ஓட் எடுக்கணுமோ இனிமேலே?

விஜயா: கட்டாயம் அப்படித்தான் செய்யணும், இப்படிப்பட்ட பெரியகாரியங்களில். இப்போதானே, காபி நிறுத்தப் பிரேரபணை கொண்டு வந்தீர்கள். அதனால் பாதிக்கப்படக்கூடியவாளாகிய எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா, நீங்

கள் தீர்மானிப்பதன் முன்?—குடும்ப சீர்திருத்த முறைதானே, அரசாங்க சீர்திருத்த முறைகளும். சுயராஜ்யமும், ஜனநாயகமும் அடிபட்ற இந்தக்காலத்திலே, நீங்கள் மட்டும் தனிக்கோல்ராஜ்யம் செலுத்தப் பார்த்தால், விட்டுவிடுவார்களா? சம்சாரத்திலே, அப்பா இஷ்டப்படியே எல்லாம் நடக்கணுமின்னு,— அம்மான்னு ஒருத்தி எதுக்கூன்னு கேழ்க்கிறேன்? நாங்கள்ளாம் ஊமா?— மாடா?— ஏனோ உங்களுக்கு, இன்னிக்கி, இப்படித் திடீர்னு புத்தி மாருட்டம். காபியைக் குடியுங்கோன்னு.

சோம: ஏதேது. குடிச்சாலொழிய விடமாட்டே போலிக்கே. பிரமாதமா, ஸோஷ்யோ பொலிடிகல் லெக்சரின்னு பண்ணிட்டே. கொண்டா குடிச்சுத் தொலைக்கிறேன். அட! ஆறிப்போகல்லேடீ. இன்னமும் கொதிக்கக் கொதிக்கக் கொண்டுவந்தியாக்கம். இப்போ, சூடு, பதம்மாயிருக்கு......உம்......நீயென்ன, நேரு, ராஜாஜி, ஐஸன்ஹவர், இவாளுக்கெல்லாம் மேலே, தெளிவாப் பேசுவே போலிருக்கே ராஜாங்க சிக்கறத்து. ராஜாங்க விஷயமெல்லாம் குடும்ப வியவகாரங்களை யொட்டியே திட்டமிடுகிருயே—. (உறிஞ்சிக் குடித்த வண்ணம்) பேஷ்-பேஷ்-ஏண்டீ. இன்னிக்கியென்ன, காப்பி ரொம்ப ஸ்பெஷலாயிருக்கே?

விஜயா: அப்பா! அப்போயிருந்த மூஞ்சியையும், இப்போ இருக்கற மூஞ்சியையும் இந்தக் கண்ணாடியிலே பாருங்கோ. சொட்டுக் காப்பித்தண்ணி, தொண்டையிலே போச்சோ, இல்லியோ, மூஞ்சியிலே எவ்வளவு களையும், உதட்டிலே எவ்வளவு சிரிப்பும்! இந்த அழகுக்கு, காப்பியை நிறுத்திடப் போருளாம். இத்தைக் கேட்டாக்க, அக்கம் பக்கத்தார், சிரிக்காதே, வேறென்ன செய்வாளென்கிறேன்.

சோம: காலம், பெண்கள் ராஜ்ய மாயிண்டு வரது. உலக சமாதானத்துக்கு, வல்லரசுகளெல்லாம் மல்லயுத்தம் போட்றது.—நீயென்னடான்னு, ஒரே மூச்சுலே, என்னைச் சமாதானம் பண்ணிட்டே. யூனியன் பிரதமராக, உன்னைத்தானடி அடுத்தபடி எலெக்ட் செய்யணும்.

விஜயா: யூனியன் பிரதமரென்ன. யூனியன் பிரஸிடெண்டாகக்கூடத்தான் எலெக்ட் செய்யலாம். ஆண்களை விடப் பெண்கள், பல விதத்திலும், ஆழ்ந்த யோசனையும், தேர்ந்த அனுபவமும், சமயோசித தீர்மானங்களும் கொண்டவர்கள்தான். ஸ்ரீமதி ஸரோஜினிதேவி, மாகாண கவர்னராகப் பேரும் புகழும் பெறவில்லையா? ஸ்ரீமதி விஜயலக்ஷ்மீ பண்டிட், இந்திய ஹை கமிஷனராக விளங்கவில்லையா? எந்தப் பதவிக்கும் நாங்கள் லாயக்குத்தான்.

சோம:—எதுக்குத்தான் லாயக்கில்லே பெண்கள். உம்— ஒரு நல்ல காரியத்தெச்செய்யறதுன்னு ஆரம்பிச்சா, கெடுக்கறதுக்குன்னு நாலுபேர் குறுக்கே வருவார்கள் என்று, கவிகள் சொல்றது, பொய்யில்லேதான்.

விஜயா:—கவிகளுக்கு, உலகானுபவம் என்ன தெரியும். பாவம். எத்தையோ கனவு கண்டுண்டு, இல்லாதது, பொல்லாததுகளையெல்லாம் கயிறுதிரிச்சு அழுதிண்டிருப்பதுதானே கவிகள் தொழில்.

சோம;—ஏதேது! விடாரி கிரிடிக் கூடப்போலிருக்கே, நீ. போகட்டும்: இன்னிக்காப்பி, ரொம்ப ருசியாயும், வாசனையாயுமிருந்துதே. என் நாக்கிலே மாறுபாடா? மனசுலே பிரமையா?

விஜயா:—பொடியிலேதான் விசேஷம். பக்கத்தாத்து மாமி கிட்டே கடன் வாங்கி வந்தேன்னு சொன்னதுக்குத்தான், வீடு ரணகளைப்பட்டு ஓஞ்சுதே. வரவர, உங்களுக்கு, மூளைக் கொதிப்பு ஜாஸ்தியாயிட்றது. ஞாபகம் என்கிறதே, இல்லாதே போயிட்றது.

சோம:—கோவிச்சுக்காதே. நம்ப நாக்லு உண்டோனே, ரொம்ப சரியான துப்பறிபவனடீ. அவாத்திலே, பொடி எங்கே வாங்கறானின்னு கேட்டுண்டுவா. இனிமே, நாமும் அங்கேயே வாங்கலாம்.

விஜயா:—இனிமேல், நாம், காப்பிக்கொட்டை வாங்கறதா? நாளைமுதல்தான் காப்பிக்கடை மூடப்போறதென்றீர்களே இந்த வீட்டில்.

சோம:— மூடத்தான் வேண்டும். ஆனல், நீதான், குடும்ப ரிப்ரஸென்டேடிவ்களிடம் விவாதித்து, ஓட் எடுத்துத்தான், காபிப்ரொஹிபிஷன் சட்டம் கொண்டுவரணுமின்னுட்டியே—. அந்த விவாதமெல்லாம் முடிந்து, ஓர் முடிவுக்கு வரத்துக்குள்ளே, எனக்கு சஷ்டியாப்தி பூர்த்தியாகி, என் மூத்த பிள்ளைக்கும் சஷ்டியாப்தி நிறைந்து விடாதா!— அதுவரைக்கும், உங்களுக்குக் காப்பி சப்ளை செய்தாக வேண்டுமே. இனிமேலே, நம்ம குடும்ப நிர்வாக விஷயங்களெல்லாம், அம்மா இஷ்டப்படித்தானே நடந்தேற வேண்டும்—.

விஜயா:— ஐயோ—போதுமே—. நீங்கள்தானே என் இஷ்டப்படி நடக்கறவாள்—. அதுகடக்கட்டும். கும்பகோணத்தார், காலமே என்ன சொல்லியனுப்பினர்கள் என்பதை, இன்னமும் நீங்கள் சொல்லவில்லையே—.

சோம:— கும்பகோணம், கும்பகோணந்தான்—. விடுன்னு அந்தக் கழுதைகளை—. சுத்த பணப்பேய்கள்—. கையிலே, பைசா குறையாதே, மூவாயிரம் கொடுத்துடணுமாம். மீதியெல்லாம், துணிமணி, வெள்ளி, பித்தளை, எல்லாம், அவாள் கொடுக்கிற லிஸ்டுப்படி, அவாளை வெச்சுண்டு வாங்கணுமாம்.

விஜயா:— ஓ—. அவாள் என்ன செய்வாளாம்?

(தொடரும்)

148725